ISSN: 2012-6352 Reg. No.: 187317

# தொண்டன்


சமய – சமூக – இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி



## எமது ஆயர் அவர்களின் அவுஸ்திரேலிய விஜயம்

MERCIFUL LIKE THE FATHER



ஏப்ரல் – 2016

50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஏப்ரல் - 2016


மலர் - 48 இதழ் - 03

**ஆசிரியர்**

அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்றி

**இணை ஆசிரியர்**

மெற்றில்டா இராஜேந்திரம்

**துணை ஆசிரியர்**

பெஸ்லியோ வாஸ்

**கணினி வடிவமைப்பு**

சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

மட்டக்களப்பு மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் – 44

மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,

திருமலை வீதி,

மட்டக்களப்பு.


## உள்ளே oooo




அன்புடன் உங்களோடு ................ 01
திருப்பலியின் மதிப்பீடு ................ 02
கானல் வசந்தங்கள் ................ 03
மாணவர் பக்கம் ................ 04
இதுதான் அரசியல் ................ 05
சிந்தனைச் செயலாக ................ 06
குடும்பங்களும் தொடர்பு ................ 08
குறுங்கதை ................ 10
உலகெங்கும் மரியாள் ................ 11
கடுகுக் கதை ................ 12
ஆலயத்தின் கோபுரம் நான் ................ 13
மருத்துவம் ................ 14
சுமைகள் ................ 16
அன்பியம் ஒரு தேசியம் ................ 17
எங்கு செல்வோம் ................ 18
புனிதர்களை அறிவோம் ................ 20
கத்தோலிக்கத் திருமறை ................ 21
இரக்கத்தின் ஊற்றாக ................ 22
மதங்கள் கூறுவதென்ன ................ 23
ஆயிரம் ஆண்டுகளுக்கு ................ 24
இலக்கிய மஞ்சரி ................ 25
எண்ணிப்பார்க்கையில் ................ 26
சின்ன விசயங்கள் சிறந்த ................ 26
திருவிவிலியம் கற்போம் ................ 27
அறிவை வளர்ப்போம் ................ 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: battiscc@gmail.com



விலை : 50/=

ஆண்டுச் சந்தா : 550/=

[தபாற் செலவு உட்பட]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு.....!



சித்திரைத் திங்கள்
மூன்றாம் நாளில் நாம்
இறை இரக்கப்
பெருவிழாவைக்
கொண்டாடுகிறோம்.

இரக்கத்தின் வடிவாய்
இருளை கிழித்து ஒளி
கொடுக்கும் மாபரன்
இயேசு இறை இரக்கமாய்
எம்மோடு இருக்கின்றார்
அவரில் நம்பிக்கை வைத்து
ஜெபித்துப்பார் இயலாது
கூடாது, முடியாது
என்ற வார்த்தைக்கு
உன் வாழ்வில் முற்றுப்புள்ளி
கனிகொடாத உன் வாழ்வு
கனி கொடுக்கும்
பூக்காத புன்னகையும்
உன்வாழ்வில் வசந்தமாய்
தவழ்ந்து நடைபயிலும்
நீ அம்மா என்று கூப்பிடுகையில்
ஓடிவந்து கரம்தூக்கும்
தாயைவிட மேலாய்
தகப்பன் இயேசு
மார்பில் அணைக்க
உடனோடி வருவார் உன் நண்பனாக.

அன்புமிக்க சகோதரங்களே!

ஆறாத காயங்களோடும், மனப் போராட்டங்களோடும், வாழ்க்கையே வெறுத்து வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? கலங்காதிருங்கள். நம் இயேசு உங்களைக் கரம் பிடித்துத் தூக்கி என் மகளே! என் மகனே! நீ என் அன்பார்ந்த மகன்(ள்) என்று அழைக்கக் காத்திருக்கிறார். அவரிடத்தில் உன் கஸ்ர துன்பங்களை நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் விதைத்துப் பார். நல்ல நிலத்தில் விழுந்த விதை நூறு மடங்கு பலன் கொடுப்பது போல உங்கள் வாழ்வைச் செழிப்பான தோட்டம் போல் மாற்றிடுவார். நீரோடையருகிலுள்ள மரங்களைப்போல் உன் வாழ்வு கனி கொடுக்கும்.

உங்கள் வாழ்க்கையில் வரும் போராட்டங்கள் நடுவில் உங்கள் வாயிலிருந்து புறப்பட்டு வரும் ஒவ்வொரு வார்த்தையிலும் நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். நம் வாயிலும், மனதிலும் வரும் எதிர்மறையான சிந்தனைத் துளிகளுக்கு உங்கள் வாழ்வை ஒப்புக்கொடாதிருங்கள். மரணமும், ஜீவனும் உங்கள் வாயிலிருந்து புறப்பட்டு வரும் உங்கள் உயிருள்ள வார்த்தையிலேதான் தங்கியுள்ளன. இன்று இறை இரக்க இயேசு உங்கள் மத்தியில் உயிரோடிருக்கிறார். அவரில் நம்பிக்கை வைத்து உங்கள் ஜீவனுள்ள நாட்களை அவர் கரத்தில் ஒப்புக்கொடுங்கள். சத்துரு உங்களை எதிர்நோக்கி வராமல் இயேசுவின் கரத்தை நீங்கள் வலிமையாய்ப் பற்றிக்கொள்ளுங்கள். இயேசு உங்களைக் காக்கும் தெய்வமாக, பரம வைத்தியராக பரிசுத்த ஆவியோடு ஜீவிய வாழ்க்கை வாழ ஆசீர்வதிக்கும் தெய்வமாக இருக்கிறார். அவரைப் பற்றிப்பிடித்து உங்கள் வாழ்வின் புயற்காற்றுக்களைத் தென்றல் வீசும் காற்றுக்களாய் மாற்றிடுங்கள்.

இம் மாதம் நம் சகோதரத் தமிழர்களின் சித்திரைப் புத்தாண்டு மலரவிருக்கின்றது. இந்த தமிழ் சித்திரைப் புத்தாண்டு உங்கள் இல்லங்களை இயேசுவின் இரக்க இல்லங்களாகவும், இறை ஒளி வீசும் வீடுகளாகவும், ஒளி வீசும் நட்சத்திரங்களாக உங்கள் ஒவ்வொருவரையும் ஜொலிக்க வைக்க, இயேசுவை விட்டுப் பிரியாத வாழ்வாக உங்கள் வீட்டையும் உங்களையும் மாற்றுங்கள். இயேசுவோடு கூட இருந்த தோமாவைப்போல் நீங்கள் சந்தேகம் கொள்ளாமல் ''இயேசுவே! தாவீதின் குமாரனே! மனமிரங்கும்'' என்று சப்தமிட்டு கூக்குரலிட்ட பர்தமேயுவைப்போல அவரது இரக்கத்துக்காய்க் கூக்குரலிட்டு அழுது அவரின் இரக்கத்தையும் ஆசிரையும் பெற்று வாழ்ந்திடுங்கள்.

ஆசிரியர்

**இறைவாக்கு**

**"கடவுள் மிகுந்த இரக்கமுடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார்"**

(எபேசியர் 2:4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பலியின் மதிப்பீடு!



அருட்சகோதரி: வெரோனிக்கா மேர்பி அவர்களுக்கு அருட்தந்தை: ஸ்ரனிஸ்லாஸ் SS.CC அடிகளாரால் சொல்லப்பட்ட உண்மைச் சம்பவம் இது. இந்த அருட்தந்தை தற்போது உயிருடனில்லை.

"லக்சம் பேக்கிலுள்ள ஒரு சிறிய நகரமது. பல்லாண்டுகட்கு முன்னர் வன இலாகா அதிகாரிகளின் தலைவர் (கப்டன் என அழைக்கப்பட்டவர்) இறைச்சி விற்பனை செய்யும் கடையொன்றில் கசாப்புக்காரருடன் ஆழமான உரையாடலில் ஈடுபட்டிருந்தார். அப்போது வயது முதிர்ந்த ஒரு பெண்மணி அவ்விடம் வந்தார்.

கடைக்காரர் பேச்சை இடைநிறுத்திவிட்டு அப்பெண்ணிடம் வந்து, "என்ன வேண்டும்" எனக் கேட்டார். அப்பெண் ஒரு சிறு துண்டு இறைச்சி தரும்படி கேட்டார். ஆனால், அவரிடம் பணமிருக்கவில்லை. இதை அவதானித்துக்கொண்டிருந்த கப்டன் "பிச்சையாக ஒரு துண்டு இறைச்சியா? ஆனால், கடைக்காரர் எவ்வளவு கொடுக்கப்போகிறார்" அறிய ஆவல் கொண்டார். அந்தப் பெண்ணோ,

"என்னை மன்னியுங்கள். என்னிடம் பணமில்லை. ஆனால், நான் உங்களுக்காகத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பேன்" என்றார். வித்தியாசமான இந்த விலையைப் பற்றிக் கேட்ட இருவருமே சிரத்தையின்றி இருந்தனர். சமயச்சார்பான விலையைத் தரப்போகிறாரா? சரி. இருவருமே உடனே ஒரு முடிவுக்கு வந்தனர்.

இறுதியில் கடைக்காரர் பெண்ணிடம்,

"சரி, நீங்கள் சென்று எனக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுத்துவிட்டு வாருங்கள். நீங்கள் திரும்பி வந்ததும் நான் திருப்பலிக்குச் சமனாக இறைச்சியைத் தருகிறேன்" எனச் சிரித்துக்கொண்டே கூறினார்.

அந்த ஏழைப் பெண்ணும் சென்று சிறிது நேரம் கழித்துக் கடைக்கு வருவதைக் கடைக்காரர் கண்டு "சரி பார்ப்போம்" என்று கூறி ஒரு சிறு கடதாசித் துண்டையெடுத்து அதில், "நான் உமக்காகத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தேன்" என்றெழுதித் தராசில் படி வைக்கும் பக்கம் வைத்தார். மறுபக்கத் தட்டில் ஒரு சிறு எலும்பை வைத்தார். எதுவுமே நடக்கவில்லை. பின் எலும்புடன் ஒரு துண்டு இறைச்சியும் வைக்கப்பட்டது. கடதாசிப் பக்கம் பாரம் கூடியதாகக் காண்பித்தது. பெண்மணியைப் பரிகாசம் பண்ண விரும்பிய இருவரும் தம் இழிய செயலுக்காக வெட்கப்பட்டாலும் இறைச்சி நிறுப்பதைத் தொடர்ந்தனர். ஒரு பெரிய துண்டு இறைச்சி தராசில் வைக்கப்பட்டும் அந்தச் சிறு துண்டு கடதாசியே பாரங்கூடியது. கடைக்காரர் நம்பிக்கையின்றித் தராசைச் சோதித்துப் பார்த்தார். ஆனால், தராசில் எந்தப் பழுதுமில்லை. பெண்ணைப் பார்த்தார்.

நன்றி : மெசேஞ்சர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண் காண்பதொன்றும் மெய் இல்லை**
**காது கேட்பதுவும் ஒன்றும் சரி இல்லை**
**ஒருவனை ஒருவன் ஏய்ப்பது என்ன பிழைப்பு**
**நல்லவனாய் மாறு அதுவே ஏற்புடைத்து**




"உங்களுக்கு என்ன அம்மா வேண்டும்? நான் ஆட்டின் முழுக்காலையும் தரட்டுமா" என்றபடி அதனைத் தூக்கித் தராசில் வைத்த போதும் இறைச்சியின் பாரம் அதிகரிக்க வில்லை. தொடர்ந்தும் பெரியதொரு இறைச்சித் துண்டு சேர்க்கப்பட்டும் கடதாசியின் பாரம் வரவில்லை. இறைச்சிக் கடைக்காரர் அதிர்ச்சியின் உச்சிக்கே சென்றார். மனம் மாறினார். அத்துடன் ஒவ்வொருநாளும் அப்பெண்ணுக்குத் தேவையான சிறிதளவு இறைச்சியைத் தருவதாகவும் வாக்களித்தார்.

கப்டன் கடையை விட்டுத் திருந்திய மனிதராகச் சென்றார். அத்துடன் தினமும் தவறாது திருப்பலி காணும் ஆசையுள்ளவராகவும் மாறினார். இவரது இரு மகன்கள் குருக்களாயினர். ஒருவர் இயேசு சபை, மற்றவர் திருஇருதயச் சபை. "அருட்தந்தை ஸ்ரனிஸ்லாஸ் இச்சம்பவத்தைக் கூறி முடித்ததும் நிறுத்தி, "நான்தான் அந்தத் திருஇருதயச் சபைக் குரு. கப்டன்தான் எனது தந்தை" என்றார்.

அந்தச் சம்பவத்தின் பின் கப்டன் தினந்தோறும் திருப்பலி செல்லும் வழக்கத்தைக் கடைப்பிடித்ததுடன் தன் பிள்ளைகளையுங்கூடத் தனது வழக்கத்தைப் பின்பற்றப் பயிற்சியளித்தார். இவரது இரு மகன்களும் குருக்களான போது, அவர் தினமும் திருப்பலியை நல்ல முறையில் பக்தி சிரத்தையுடன் ஒப்புக்கொடுக்கும்படியும், என்றுமே தமது எந்தவித சொந்தக் குற்றங்களாலும் திருப்பலியை ஒப்புக்கொடுக்காமல் விடவேண்டாமென்றும் அறிவுரை கூறினார்.

"ஒவ்வொருநாளும் காணும் திருப்பலி சாத்தானைத் துரத்தும் வல்லமை மிக்கது". A

## "கானல் வசந்தங்கள்"

**- நூல் வெளியீட்டு விழா -**

கல்முனையைச் சேர்ந்த அதிபர்: திரு: ஜெ. டேவிட் 'பைந்தமிழ்க்குமரன்' எனும் புனைபெயரில் தனது ஆக்கங்களை வெளியிட்டு வருகிறார். மாசித்திங்கள் 28ந் திகதி (28.02.2016)அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கல்முனை, திரு இருதயநாதர் மண்டபத்தில் **"கானல் வசந்தங்கள்"** எனும் தனது நூலை வெளியிட்டுள்ளார். கல்முனை கலை இலக்கிய நண்பர்கள் இதனை முன்னின்று நடத்தினர். திரு. உமா வரதராஜன் தலைமை வகித்த இவ்வெளியீட்டு விழாவில் பேராசிரியர்: மௌனகுரு, கலாநிதி: திரு: சத்தார் ஆ. பிர்தௌஸ், திரு: S. அரசரெத்தினம் ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன. பைந்தமிழ்க்குமரன் ஜெ. டேவிட் 'தொண்டன்' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர். தொண்டன் கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவையில் ஒரு அங்கத்தவராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது எழுத்தாற்றல் வளம் பெறவும், தொடர்ந்தும் அவரது ஆக்கங்கள் வெளிவரவும் தொண்டன் சஞ்சிகை வாழ்த்துகிறது.

– நிர்வாகம் –
**தொண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




-நில்மினி கஜேந்திரன்-

## தூய ஆவியின் வருகையும், திருச்சபையின் ஆரம்பமும், வளர்ச்சியும்

இயேசு விண்ணேற்படைந்த பின்னர் அவருடைய சீடர்கள் 120 பேர் அவரின் வேண்டுகோளுக்கிணங்க அவரின் தாய் மரியாளுடன் மேல் மாடி அறையில் ஒன்றாய்க் கூடிச் செபித்துக்கொண்டிருந்தனர். அவர் வாக்களித்த தூய ஆவியின் வருகைக்காக அவர்கள் காத்திருந்தனர். இயேசுவும் தாம் வாக்களித்த தூய ஆவியின் வருகைக்காகப் பெந்தக்கோஸ்து தினத்தைத் தேர்ந்துகொண்டார்.

யூதர்கள் மூன்று முக்கிய பெருவிழாக்களைக் கொண்டாடுவர். அவையாவன, பாஸ்கா விழா, கூடாரத் திருவிழா மற்றும் வாரங்களின் விழாவாகக் காணப்பட்டன. ஆரம்பத்தில் பாஸ்காவிழா, அறுவடையின் ஆரம்ப விழாவாகவும், வாரங்களின் விழா அறுவடையின் முடிவு விழாவாகவும் கொண்டாடப்பட்டது. அன்றே இஸ்ரயேல் மக்கள் தம் விளை நிலங்களின் முதற் பயனை இறைவனுக்குக் காணிக்கையாய் அளித்து நன்றி செலுத்தினர். பின்னர்தான் பாஸ்கா விழா இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் இருந்து விடுதலை பெற்று வந்த நாளை நினைவுகூருவதாய் அமைந்தது. இது பாஸ்கா விழாவிற்குப் பின்வரும் ஐம்பதாவது நாள் அதாவது 7 வாரங்களின் பின் கொண்டாடப்பட்டது. வாரங்களின் விழாவானது கிரேக்க மொழியில் 50 எனப் பொருள்படும் "பெந்தக்கோஸ்து" விழா என அழைக்கப்பட்டது. இவ் விழாவானது பின்னர் எகிப்திலிருந்து இஸ்ரயேலர் வெளியேறிய 50வது நாள் அவர்கள் சீனாய் மலையில் யாவேயோடு செய்துகொண்ட உடன்படிக்கையை நினைவுகூரும் நாளாகவும், இறைவன் இஸ்ரயேல் மக்களுக்கு 10 கட்டளைகளை அளித்த நாளாகவும் கொண்டாடப்பட்டது. இத்தினத்திலேயே இஸ்ரயேலர் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக உருவாக்கம் பெற்றதையும் நினைவுகூர்ந்தனர். இயேசுவும் இத்தினத்திலேயே தம் சீடர்களைப் புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக, புதிய இறைமக்கள் சமூகமாக, புதிய இஸ்ரயேலாக, திருச்சபையாக உருவாக்கத் திட்டமிட்டார்.

இவ்விழாவின் போது யாவே தம் திருப்பெயருக்கெனத் தேர்ந்துகொண்ட இடத்தில் இஸ்ரயேலைத் தம் முன் வரப்பண்ணினர். ஜெருசலேமின் பாஸ்கா விழாவிற்குப் பாலஸ்தீன யூதர்களே அதிகம் வருவர். ஆனால், வாரங்களின் அல்லது பெந்தக்கோஸ்து விழாவிற்கு உலகெங்கு முள்ள சிதறுண்டு வாழும் யூதர்கள் (பார்த்தர், மேதியர், எலாமித்தர், மெசப்பொத்தோமியா, யூதேயா, கப்பதோக்கியா, போந்து ஆகிய நாடுகளில் வாழும் பெருந்திரளானோர்) ஜெருசலேமில் கூடியிருந்த வேளையில் தான் பரிசுத்த ஆவியானவர் வருகையுடன் திருச்சபை பிறந்தது. இத்தினத்திலே இயேசுவில் விசுவாசம் கொண்ட அனைவருமே திருமுழுக்குப் பெற்றுப் புதிய இஸ்ரயேல் சமூகமாய், புதிய இஸ்ரயேலாக உருப்பெற்று விளங்கினர். அவர்கள் ஒன்றுகூடிச் செபித்துக் கொண்டிருந்த வேளையில், ஒவ்வொருவர் மீதும் அக்கினி நாவு வடிவில் தூய ஆவியானவர் பொழியப்பட்டு, ஒவ்வொருவரும் புதுப் பெலன் பெற்று அயல்மொழிகளில் பேசி ஆவியால் நிரம்பப் பெற்றனர். இங்கு இறைவாக்கினர் யோவேலின் வாக்கு "இறுதிநாளில் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிவேன்" என்பது நிறைவேறியது.

இவ்வாறு தூய ஆவியால் நிறையப் பெற்றுப் புத்துயிர் பெற்ற திருச்சபையானது, செயலூக்கம் பெற்றதாய் விளங்கியது. திருத்தூதர்கள் உடனடியாகத் தம் புது வாழ்வுப் பணியினை ஆரம்பித்தனர். திருத்தூதர்களில் பேதுரு எழுந்து தம் தலைமைத்துவம் வெளிப்படப் பேசுவதைக் காணமுடிந்தது. படிப்பறிவற்ற, கோழையான, சாதாரண மீன்பிடித் தொழிலாளியாகிய பேதுரு ஆற்றிய உரையின் மூலம் இறைவாக்கினர் யோவேல் முன்னறிவித்துக் காத்திருந்த நாளை, ஆண்டவரின் வாக்கு நிறைவேறிய நாளை, புது யுகமாகத் திருச்சபை பொலிவு பெற்றமையைக் காணக்கூடியதாயுள்ளது.

- தொடர் 07ம் பக் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதுதான் அரசியல்

பாமுரவேந்தன்

அரசியலில் கடந்த மாதம் ஒரே சுவாரஸ்யம்தான்! மாதம் போனதே தெரியவில்லை. புதிய கட்சிகள் தோன்றும் என்று 'புலி வந்த கதை' யாய் இருந்தது ஒரு புறம். கைதுகளும், தடுப்புக் காவல்களும் கண்ணீர் வர வழைத்த சேதிகள் மறுபுறம். கைதைத் தடுக்கப் புதுக் கட்சியா? அல்லது புதுக் கட்சியைத் தடுக்கக் கைதுகளா? விளங்கவில்லை. ஆனால், கைதுகள் தொடர்கின்றன. கட்சியோ உதயமாகக் காணோம். ஆனாலும் தமிழர்களுக்கென்று புதிதாக இன்னுமொரு கட்சி தொடங்கியிருக்கிறது. புதிதாக என்று சொல்ல முடியாது. ஆனால் தூசு தட்டிப் புது மெருகூட்ட முனைந்திருக்கிறார்கள் ஈழப் போராட்டத்தில் அறிவார்ந்த அணுகுமுறையைப் புகுத்திய ஈரோஸ் இயக்கத்தினர். அதன் பிரிவு ஒன்று இந்த ஆரம்பத்தினால் எச்சரிக்கையடைந்து தமிழ்த் தேசிய நீரோடையில் குதித்திருக்கிறார்கள் தங்களது இரண்டு மூன்று அங்கத்தவர்களுடன். அவ்வளவுதான் அந்தக் கட்சியின் விஸ்தீரணம்! புதிய கட்சி இதில் பிரிவு இரண்டாகும். பொறுத்திருந்துதான் அவர்களது செயற்பாட்டைக் கவனிக்க வேண்டும். இவ் அமைப்பு தமிழ் பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் - மலையகம் உட்பட - கால் பதித்துள்ளமை தெரிகிறது.

வெளிநாட்டுப் பிரமுகர்களாலும், வெளிநாட்டுப் பயணங்களாலும் இலங்கை திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது. இதில் இந்தியா தனது சித்து விளையாட்டுக்களையும், இடுக்கிப்பிடிகளையும் விட்டுக் கொடுப்பதாகக் காணவில்லை. தற்போதைய இந்திய அரசு அமெரிக்காவுடன் கொண்டிருக்கின்ற நெருக்கமான உறவை இலங்கையில்,தமிழர் பிரச்சினையிலும் காண்பிக்கின்றது. தமிழர் தாயகத்தில் மக்கள் இன்னும் மண்ணைப் பறிகொடுத்தவர்களாக வாழும்போது, மக்கள் அகதி முகாம்களில் இருக்கின்றபோது மக்கள் காணிகளைப் பயன்படுத்தி விமான நிலையங்களை விஸ்தரிக்கின்ற முயற்சிக்குத் துணைபோவதுமட்டுமல்ல, அந்த முயற்சிக்கு இடையூறாக இருக்கக் கூடிய வடக்கு முதல்வரையும் அமெரிக்காவுடன் சேர்ந்து அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்தும் இருக்கிறது. இந்த இந்தியத் தலையீடு தொடரும் வரை, தமிழர்க்கான தீர்வு என்பது தமிழனுக்கு உகந்ததாக நிச்சயம் இருக்கப்போவதில்லை என்று நெஞ்சுக்குப் புலனாகிறது.

அரசாங்கம் காணாமல் போனோரைக் கண்டு பிடிக்க நியமித்த மக்ஸ்வெல் பரணகம ஆணைக் குழு. தனது இடைக்கால அறிக்கையில்தான் என்ன நோக்கத்திற்காக அரசினால் உருவாக்கப்பட்டதென்பதை நிரூபித்திருக்கிறது. இறுதி யுத்தத்தில் சொல்லப்பட்டவாறு அதிகம் பேர் இறக்கவில்லை, அவர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று வாழ்கிறார்கள் என்று நேரடியாகக் கண்டது போல் தெரிவித்திருக்கிறது. அதன் நோக்கம் நிறைவேறியிருக்கிறது.

யுத்தம் நிறைவடைந்து ஆறு வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. கடந்த 35 வருட காலமாகத் துன்புற்றுவந்த மக்களின் வறுமையை,துயரத்தை,வாழ்க்கை அவலத்தைப் போக்க எதுவுமே எவராலும் ஆக்கபூர்வமாகச் செயற்படுத்தப் படவில்லை. எரிகின்ற வீட்டிலே பிடுங்கியது இலாபம் என்று மத்திய கிழக்கு நாடுகளின் இலவச நிதி ஆதரவுடன் துன்புற்றுக்கொண்டிருக்கும் மக்களுக்கு வீடு, பணம் என்று ........

- தொடர் 07ம் பக் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை செயலாக வேண்டும்



ஈரமுள்ள இதயத்தில் தான் அன்பு சுரக்கும். அன்பு கொண்ட நெஞ்சில்தான் கருணை பிறக்கும். ஊற்று உள்ள மண்ணில் நித்தம் நீர் சுரப்பதுபோல இரக்கம் உள்ள உள்ளத்தில்தான் அடுத்தவர் பற்றிய எண்ணம் ஊற்றெடுக்கும். அது அடுத்தவருக்காக வாழும். நெஞ்சில் நிறைய எண்ணங்கள் பிறக்கலாம், அது நம்மைப் பற்றியும் இருக்கும் பிறரைப் பற்றியும் இருக்கும். எப்படியிருப்பினும் கிணற்று நீர் அள்ளப்படாதவரை அதனால் பயன் ஏதும் இருப்பதில்லை. சமயத்தில் அது பழுதுபட்டுப் போகும்.

அன்பு உள்ள இதயமாக நம் இதயம் இருக்குமானால், அதில் நிச்சயம் அடுத்தவரைப் பற்றிய சிந்தனை நிறைய இருக்கும். அந்தச் சிந்தனைகள் கட்டாயம் மற்றவருக்கு நன்மை செய்யும் சிந்தனையாகவே இருக்கும். ஆனாலும், அந்தச் சிந்தனைகள் பலன் தராமல் போக நாம் காரணமாக இருத்தல் ஆகாது. ஆயிரம் சிந்தனைகள் உள்ளத்தில் உதயமாகலாம். அந்தச் சிந்தனைகள் செயல் வடிவம் பெறாது போனால் அனைத்துமே பலனற்றுப் போய்விடும்.

இந்தவகையில் வாழ்க்கையில் ஒருவருக்கு இரண்டு வகையான தோல்விகள் ஏற்படுகின்றன. அதில் சிந்தித்தவர்கள் பின்னர் அதற்குச் செயல் வடிவம் கொடாமற்போவது ஒரு தோல்வி, மற்றையது, சிந்திக்காமல் செயல்படுவது. இந்த இரண்டு தோல்விகளும் நம் நெஞ்சத்தின் நன்மைத்தனத்தைப் பிறர் அனுபவிக்காமற் செய்துவிடுகின்றன.

நசரேத்தூர் வந்து ஓய்வுநாளில் செபக் கூடம் சென்ற இயேசுவிடம் எசாயாவின் சுருளேடு கொடுக்கப்பட்டு அவர் அதைப் பிரித்துப் பார்க்க, அதில் கண்ட வாக்கியங்கள் இயேசுவுக்கே உரியனவயாக அமைந்து விடுகின்றன. "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை வாழ்வு பெறவும், பார்வையற்றோர் பார்வை பெறவும், ஒடுக்கப்பட்டோர் விடுதலை பெறுவர் என முழக்கமிடவும், ஆண்டவரின் அருள் தரும் ஆண்டினை அறிவிக்கவும்" என்னை அனுப்பினார் என்று வாசித்துத் தம்மை அந்த வாசகத்தோடு அடையாளப்படுத்தி, அந்தப் பணிக்குரிய சிந்தனைகளில் இறங்கி, அதற்குச் செயல் வடிவமும் கொடுத்தார். அவர் சிந்தனை செயலாக மாறியிராது போனால் ஆண்டவரின் இரக்கத்தை அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் அடைந்திருக்கவே மாட்டார்கள்.

இயேசு இறந்தவரை உயிர்ப்பித்தார், முடவரை நடக்கப் பண்ணினார். பசாசின் அடிமைத்தளையை உடைத்தெறிந்தார், நோயிலிருந்து விடுதலை வழங்கினார். தம் தந்தையின் நற்செய்தியைப் பறைசாற்றினார். இறைவனின் இரக்கத்தை மக்கள் அடைவதற்கு அவரது சிந்தனைகளை விடவும் செயல்களே பெரிதும் உறுதுணையாக இருந்தன.

நமக்குள் இருக்கும் கருணையும், இரக்கமும் அடுத்தவரைச் சென்றடையவும், அதன் மூலம் அவர்கள் இறைவனின் அன்பை அனுபவிக்கவும் வேண்டுமானால் நாம் அந்த இரக்கத்தை மற்றவர்கள் மத்தியில் கொண்டு போய்ச் சேர்க்கும் கருவிகளாகச் செயற்பட வேண்டியது அவசியம். அருள் அவரது, அதை அடுத்தவரிடம் தூக்கிச் செல்லும் செயலோ நம்முடையதாக இருக்கவேண்டும். அவரின் செயலணி வீரர்களாக நாம் அமைவது இன்றைய உலகில் மிகவும் அவசியமானது. நம்முடைய இதயத்தின் இரக்கத்தை மற்றவர்களுக்கு வழங்காத வரையில் நமக்கு மற்றவர்களுடைய இரக்கம் கிட்டமாட்.

- ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாது. இறைவனின் இரக்கமும் நம்மை வந்து சேராது போய்விடும். நன்மையை உலகில் விதைக்க இந்த இரக்கத்தின் ஆண்டு நமக்கொரு அருள்வரம். அடுத்த வரை எண்ணி வாழ நமக்கொரு வாய்ப்பை அது தந்து நிற்கின்றது. இந்த வாய்ப்பைக் கையில் எடுத்துக் கொள்ளவும், இறை இரக்கத்தை அறுவடை செய்யவும் நாம் செயல்படத் தயாராவோம். இறைவனின் வழிகாட்டுதல் நம்மோடு என்றும் இருக்கட்டும்.

## தெரிந்துகொள்வோம்!

முதலில் ....

முதன் முதலில் மோட்டார் கார் ஜெர்மனியில் உருவாக்கப்பட்டது.

தென்னிந்தியாவில் முதன் முதலில் மதுவிலக்கை அறிமுகப்படுத்தியவர் திப்பு சுல்தான்.

தீயணைப்பு நிலையம் முதன் முதலில் 1824ல் இலண்டனில் அமைக்கப்பட்டது.

சக்கரத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவர்கள் சுமேரியர்கள்.

சவர்க்காரம் முதன் முதலில் ஐரோப்பாவில்தான் அறிமுகமானது.

சிறைச்சாலை முதன் முதலில் இங்கிலாந்தில் 1403ல் கட்டப்பட்டது.

மிளகாய் முதன் முதலில் ஸ்பெயின் நாட்டில் பயிரிடப்பட்டது.

## - மாணவர் பக்கம் -

.... பேதுருவின் உரையிலே நற்செய்தியின் முக்கிய சாராம்சம் அனைத்துமே அடங்கியுள்ளதைக் காணமுடிகிறது. மேலும், பேதுருவின் உரையின் மூலம் இஸ்ரயேலர் தாம் செய்த மிகப் பெரிய பாவமாகிய குற்றத்தினை உணர்ந்தனர். எனவே, தாம் செய்யவேண்டியவைகளை உணர்ந்தோராய் மனமாற்றம் அடைந்து மன்னிப்புப் பெற்று திருமுழுக்கும்பெற்று நெறிகெட்ட தலைமுறையிலிருந்து விலகி வாழ்தல் போன்ற பல விடயங்களைக் கடைப்பிடிக்க முடிவெடுத்தனர். இதன் மூலம் 3000 பேர் திருமுழுக்கு பெற்று, மனமாற்றம் அடைந்தது திருச்சபையின் வளர்ச்சிக்கு வழிகோலியது. எனவே, தூய ஆவியின் வருகையும், பேதுருவின் உரையும் திருச்சபை வளர்ச்சி பெறப் பேருதவியாக அமைந்தன.

## இதுதான் அரசியல் ....

.... வழங்கி தேர்தல் காலத்தில் வாக்கு வாங்கிச் செயற்பட்டதையொத்த மதம் மாற்றும் கைங்கரியங்கள் தமிழர் மத்தியில் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. திட்டமிட்ட ரீதியில் நிலம், பிரதேசம், வாக்குத் தொகை என்று மக்களது பூர்வீகத்தையே, வாழ்விடத்தையே சூறையாடுகின்ற முயற்சிகள் நடைபெறுவதாகப் பல தகவல்கள் தெரிவிக்கின்றன. உண்மைகள் சரிவரத் தெரியாது போனாலும் விழிப்போடு இருக்கவேண்டிய தருணம் இதுவென்று மட்டும் தெரிகின்றது. சர்வமத அமைப்புகள் தக்க வழிகாட்டுதல்களை வழங்கித் தவித்த முயலை அடித்துப் பிடிக்கின்ற கைங்கரியங்களைத் தடுத்தேயாக வேண்டும்.

அரசியலமைப்பை மாற்றுவதா? புதிதாக உருவாக்குவதா? திருத்துவதா? யாருக்குமே தெளிவில்லை. இதற்குள் மக்களின் கருத்தறியும் ஆணைக் குழுக்கள் அரசினால் அமைக்கப்பட்டு அவை பிரதேசங்கள் ரீதியாகச் சென்றுள்ளன. ஏட்டிக்குப் போட்டியாக பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன, இணை என்றும், பிரி என்றும், அதிக அதிகாரம் என்றும் அளவோடு அதிகாரம் என்றும் மாறி மாறி முன்மொழிவுகள். யாருடைய கருத்து எடுபடும்? யாருக்குச் செவிசாய்க்கப்படும்? புரியவில்லை!

உலக நாடுகளிலே இன்று மத்திய கிழக்கு நாடுகளில்தான் அமைதி இல்லாத நிலை. அங்கிருந்து மக்கள் செல்வம் கொழிக்கும் ஏனைய பாதுகாப்பான மத்திய கிழக்கு நாடுகளுக்குள் செல்லாது ஐரோப்பிய நாடுகளையே நாடுகின்றனர். நாடுகின்றார்களா அல்லது நாடும்படிச் செய்யப்படுகின்றார்களா? பண்டைய காலத்தில் மொகம்மதிய படையெடுப்புக்களையும், அதற்கெதிராகச் சிலுவை யுத்தங்களையும் கேள்விப்பட்டிருந்தோம். இன்று கத்தியின்றி, சத்தமின்றி அந்தச் சரித்திரம் மீள எழுதப்படுகின்றதா? இப்போது அகதிகளாக அவர்கள் சென்ற பின்பு அவர்களை அடிப்படையாகக்கொண்டு பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் சிக்கல்கள் எழுந்துள்ளன. இது ஏன்? அனைவரும் சிந்திக்கவேண்டிய விடயமாக இது உள்ளதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பங்களும் தொடர்பாடலும்

- Dr. P. யூட் ரமேஸ் ஜெயக்குமார்
MBBS(SL), D.Psych(Col), FMH(Can)

தொடர் - 06

ஒவ்வொரு வீட்டிலும் ஒழுங்கு, கட்டுப்பாடு இருப்பது அவசியம். ஏற்றுக் கொள்ளக்கூடிய நடத்தைகளையும், சுய கட்டுப்பாட்டையும் கற்றுக்கொள்ளப் பிள்ளைகளுக்கு உதவுவதோடு, ஒழுங்கு கட்டுப்பாட்டின் இலக்காக உள்ளது.

நாங்கள் விதிக்கும் எல்லைகளைப் பிள்ளைகள் சில சமயங்களில் கடக்கப் பார்ப்பார்கள். இருப்பினும் பொறுப்புள்ள பெரியவர்களாக அவர்கள் வளர்வதற்கு இவ்வெல்லைகள் அவசியம் தேவை என்பதை உணர்த்த வேண்டும். அன்றைய படிப்புகள் முடியும்வரை "தொலைக்காட்சி" பார்க்க முடியாது. "பட்டம் கூறுதல்", புண்படுத்தும் கேலி, கிண்டல்கள் வேண்டாம்" என்பது போன்ற எமது விருப்புகளை அறிவதன் மூலம் பிள்ளைகள் எங்களது எதிர்பார்ப்புகளை அறிந்துகொண்டு சுயகட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும். விதிக்கும் கட்டுப்பாடுகளை நாம் தொடர்ந்து பேணவேண்டும். தொடர்ச்சி இல்லாது போனால் வளர்ச்சி இராது.

பிள்ளையின் தவறைப் பிடிக்கக் காத்திராது நல்லதைப் பிடித்துப் பாராட்டக் காத்திருப்போம். ஒரு நாளில் எத்தனை தடவைகள் பிள்ளையில் குறை கண்டு திட்டினோம் என்பதை ஒரு தடவை நின்று நிதானமாக நினைத்துப் பார்ப்போம். பிள்ளையைப் போற்றியதைக் காட்டிலும் திட்டியதே கூடுதலாக இருக்கும். "சொல்லாமலே நீ படுக்கையைச் சரி செய்தாய், பல் துலக்கினாய், மிகவும் நல்லது" "தம்பியோடு நீ பொறுமையாக விட்டுக்கொடுத்து விளையாடினாய் மிக அற்புதம்" என்றவாறு நல்லவற்றைப் போற்றிவர பிள்ளைகள் நல்ல முறையில் வளர்வார்கள். பிள்ளையில் குறை காணாமல் பிள்ளை விடுகின்ற குறையில் பிழை காண்பதே சிறந்தது. "நீ கெட்டிக்காரி. ஆனால், படித்த புத்தங்களை அவ்விடத்திலேயே விட்டுவிட்டுச் சென்றாயே, அதுவே பிழை" என எமது குறைசொல்லல் அமைய வேண்டும். அது பிள்ளையின் சுய கௌரவத்தை அதிகரிக்க அடுத்த தடவை அவ்வாறான செயலைத் தவிர்க்க உதவியாக அமையும்.

பார்த்ததைக், கேட்டதைப்போல் திரும்பச் செய்தல் பிள்ளைகளது இயல்பு. எப்படி நடந்து கொள்வது என்பதைப் பெற்றாரைப் பார்த்தே பிள்ளைகள் பெருமளவில் கற்றுக்கொள்கின்றனர். நாங்கள் ஒவ்வொன்றையும் செய்யும்போது, எங்களது பிள்ளை அவ்வாறு செய்வதை விரும்புவோமா? என்பதை ஒருகணம் நினைத்துப் பார்த்துவிட்டு செய்வோம். அடிக்கும் பிள்ளையின் வீட்டை அவதானித்தால் அங்கு ஒரு "உதாரண புருஷர்" அல்லது பெண்மணி இருக்கக் காண்போம். எங்களது பிள்ளையிடம் வளர்க்க விரும்பும் நற்பண்புகளின் முன்மாதிரியாக நாங்கள் இருப்போம். எங்களது பிள்ளை அதற்கு உகந்தவாறே வளரும். மற்றவர்கள் எங்களை எவ்வாறு நடத்தவேண்டும் என்று நாங்கள் விரும்புவோமோ, அவ்வாறே எங்கள் பிள்ளைகளை நாங்கள் நடத்துவோம்.

பெற்றவர்கள் என்பதற்காக நாங்கள் சொல்லும் எல்லாவற்றையும் செய்துவிட வேண்டும் என்று பிள்ளைகளிடம் எதிர்பார்க்க முடியாது. ஏன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிச் செய்யவேண்டும் என்ற விளக்கத்தையும் பிள்ளைகள் அறிய விரும்பவார்கள். அதை அறியும் தகுதி அவர்களுக்கு உண்டு. காரணங்களை விளக் காது போனால், எமது நோக்கங்கள், பெறுமா னங்கள் பற்றிச் சந்தேகிக்கத் தொடங்குவார்கள்.

பிள்ளையின் நடத்தை எங்களுக்கு அடிக்கடி ஏமாற்றம் தருவதாக இருக்குமானால், எங்களது எதிர்பார்ப்புகள் யதார்த்தத்திற்குப் பொருந்தாதவைகளாக இல்லாதிருக்கும் என்று நினைத்துப் பார்ப்பது நல்லது. "என் பிள்ளை கட்டாயமாக இதைச் செய்யத்தான் வேண்டும்," என்று எதிர்பார்க்கும் தாய், தந்தையர் நிச்சயமாக வேறு பெற்றோர்களையோ, பிள்ளை வளர்ப்பு நிபுணர்களையோ கண்டு கலந்துரையாடுவது நல்லது. சூழல் பிள்ளையின் நடத்தையில் தாக்கத்தை ஏற்படுத்தும். சூழலை மாற்றுவதால், குறித்தவொரு நடத்தையை மாற்றமுடியும். பிள்ளை (வயதில்) மாற்றமடையும்போது, எங்களது வளர்ப்பு முறையிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

கட்டிளமைப் பருவத்தினர் தாய், தந்தைய ரைக் காட்டிலும் ஒத்த வயதுக் குழுவினரிடமே தாம் பின்பற்றுவதற்கான முன்மாதிரி நபர்களை நாடுவர். ஆயினும், எங்களது பிள்ளைகளுக்குச் சுதந்திரத்தைக் கொடுப்பதோடு எங்களது வழி காட்டல், தூண்டுதல், பொருத்தமான ஒழுங்குக் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வோம்.

பெற்றோர் என்ற வகையில் எங்களது பிள்ளையைத் திருத்துவதும், வழிநடத்துவதும் எங்களது பொறுப்பாகும். பிள்ளையிடம் நாங்கள் கருத்துகளைக் கூறும் முறையிலேயே பிள்ளை அதை ஏற்பதும், ஏற்காது விடுவதும் தங்கியுள்ளது. பிள்ளையை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும்போது குற்றம் சுமத்துவதையும், குறை கூறுவதையும், பிழை கண்டுபிடிப்பதையும் தவிர்த் துக்கொள்வோம். இச்செயல் பிள்ளையின் தன் மதிப்புணர்வைத் தகர்த்துவிடும். எதிர்ப்பு உணர் வைத் தூண்டும்.

பிள்ளைகளுக்கு ஒழுக்கக் கட்டுப்பாடு களைப் பயிற்றும் வேளையிலும் கூட, அன்பாக வும், உற்சாகம் ஊட்டும் வகையிலும் எடுத்துக் கூறுவோம். நல்லதை எதிர்பார்க்கும் வேளையில் எது கிடைக்கிறதோ இல்லையோ, எங்களது அன்பு எப்படியும் கிடைக்கும் என்பதைப் பிள்ளை களுக்கு உறுதிப்படுத்துவோம்.

**நீதிமொழிகள் நூலிலிருந்து**

**"முதியோருக்கு அவர்களுடைய பேரப்பிள்ளைகள் மணிமுடி போன்றவர்கள்; பிள்ளைகளின் பெருமை அவர்கள் தந்தையரே"** 17:6

**"ஞானமுள்ள மகன் தந்தையின் நற்பயிற்சியை ஏற்றுக்கொள்வான்; இறுமாப்புள்ளவனோ கண்டிக்கப்படுதலைப் பொருட்படுத்த மாட்டான்"** 13:1

செய்து முடிக்கக்கூடியதொரு பணியாகப் பிள்ளை வளர்ப்பை ஆக்கிக்கொள்ள முயற்சிப் போம். ஆகக் கூடுதலாக கவனிக்கப்பட வேண்டி யவற்றுக்கு முன்னுரிமை கொடுப்போம். எல்லா வற்றையும் ஒரே சமயத்தில் செய்து முடிக்க முயற்சியாதிருப்போம். சலிப்பு ஏற்படும்போது சற்று விலகி இருந்து மகிழ்வு தரும் வேறு விடயங்களில் ஈடுபடுவோம். பின்னர் பிள்ளை களுடன், குடும்பத்துடன் ஈடுபாடு காட்டமுடியும். ஒருவர் தன்மீது அக்கறை கொள்வது விரும்பத் தக்க ஒன்றாகும். கூடி வாழ்வதால் கோடி நன்மை, மகிழ்ச்சியான குடும்பங்களிலேயே மிக மகிழ்ச்சி யான பிள்ளைகள் இருக்க முடியும். தேவையற்ற பெறுபேற்றை மையப்படுத்திய போட்டியைக் களைந்து, பல்திறன் ஆளுமைமிக்க சுயமாக இயங்கக்கூடிய, தனித்து முடிவெடுத்து வெற்றி கரமாக வாழக்கூடிய பிள்ளைகள் உருவாகு வார்கள். அப்போது "ஈன்றபொழுதில் பெருதுவக் கும் தன் மகவை சான்றோனாக அழைக்கக் கேட்ட பெற்றோராக" நாம் மாறுவோம்.

இதுவே நாமின்று எதிர்பார்க்கும் குடும்பங்களும், அவற்றுக்குத் தேவையான தொடர்பாடலும் ஆகும்.

"காலத்தினால்செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணம்பெரிது"

- முற்றும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானைக்கயம்

குறுங்கதை - 24

**- வீக்கேயெம் -**

சிவராமன் அப்போதுதான் மெல்ல மெல்ல நீந்தப் பழகியிருந்தான். வயலெது, குளம் எதுவென்று தெரியாத அளவிற்கு மாரியின் வரவால் குளத்தை மேவியவாறு வெள்ளம் நிரம்பி வழிந்தது.

கோயிலின் முன்பாக இருந்ததாலும், படிக்கட்டுகள் லேசாகத் தெரிந்ததாலும், கீழ் வான்கரையில் வடக்கிலும், தெற்கிலும் இரு கிணறுகளின் தூண்கள் வெளித் தெரிவதாலும் மட்டுமே மாரியில் குளத்தை இனங்காண முடியும்.

கோடையில் வற்றிச் சிறிதாக இருந்தபோது பிடிமானம் ஏதுமின்றி நீந்திக் கடக்கத் தெரிந்த சிவராமன், நிரம்பிய குளத்தில் வெறுமனே நீச்சல் போடமுடியாதென்ற மனக் கிலேசத்துடன், பனங்குற்றி ஒன்றைப் பற்றியவாறு நடுக்குளம்வரை சென்றுவிட்டான்.

குளத்தின் மையத்தில் திடீரெனத் தோன்றிய உருவங்கண்டு, முதலையோவெனத் திகைத்தவன், நடுத்தர வயதுடைய ஒரு மனிதனைக் கண்டதும் திகைப்பிலிருந்து விடுபடுவதற்குள், இவனது குற்றியைப் பறித்துத் தூரத் தள்ளிவிட்டான் அவன்.

மாரி காலத்தில் வயல் வெள்ளத்தில் நீந்தி வந்து சேரும் முதலைகள் அந்தக் குளத்தையும் ஆக்கிரமிப்பதுண்டு. நீர் வற்றும் போது அதுவும் எப்படியோ போய்ச் சேர்ந்துவிடும்.

இப்போது இளைஞனான இவனுக்கு அவன்மேல் கோபம் கொப்பளிக்கத் தொடங்கியது.

இந்த மனிதனைத் தானும் பயமுறுத்த வேண்டுமென்ற நினைப்போடு, நீந்த முடியாமல் தத்தளிப்பதாக நடித்து குளத்தினுள் அமிழ்ந்தான்.

அந்த மனிதருக்கு நடுக்கமெடுத்தது. தானும் நீரில் மூழ்கி அவனை இழுத்து மேற்பரப்புக்குக் கொண்டுவந்தார்.


அவன் வாய்க்குள் சேர்த்து வைத்திருந்த நீரை வாந்தியெடுப்பதுபோல் விட்டு விட்டுக் கொப்பளித்து, கண்கள் மேல் நோக்கிச் செருக, மயங்கியதுபோல் நடித்தான், குளத்து நீரினை அதிகமாகப் பருகியது போல்.

"டேய் ..... டேய் தம்பி, உன்ர அம்மா உன்னைக் கூப்பிடுறாவடா ..... எழும்பு.... எழும்படா!"

அவரது குரலில் பதற்றம் தெரிந்தது.

நீரினுள்ளே அமுங்கியிருந்த செவிகளைத் தீட்டி, மேலெழுந்து அவதானித்தான்.

உண்மையில் அம்மா கூப்பிடுவது செவியில் விழுந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெங்கும் மரியாளின் புகழ் ...


## வெட்ரானாவின் அன்னை கஸ்தெல்லானா க்ரோத்தே, இத்தாலி

12



முர்கே பகுதியின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு சிறிய நகரமான கேஸ்டெலனாவில் இறைவனின் அன்னையான கன்னி மரியாளின் அற்புத சுரூபம் தாங்கிய சிற்றாலயம் ஒன்று இருக்கிறது. 17ம் நூற்றாண்டில், கடுமையான உயிர்கொல்லி நோயான பிளேக் இப்பிராந்தியத்தை தாக்கியபோது அதிலிருந்து இப்பகுதியை விடுவித்த அன்னை என்று நன்றியுணர்வோடு மக்களால் அங்கு மரியன்னை போற்றப்படுகின்றார். இந்த நிகழ்வுக்குப் பிறகு 'தி வெட்ரானா' எனவும் அன்னை அழைக்கப்பட்டு வருகிறார். பிளேக் நோய் மறைந்த பிறகு, புனிதத் திருச்சிலையை நேரில் கண்டு தங்கள் அன்பையும், மரியாதையையும் செலுத்துவதற்காகப் புனிதப் பயணம் மேற்கொள்ளும் யாத்திரிகர்கள் மற்றும் விசுவாசிகள் தொடர்ந்து வருகை தருகிற ஒரு புனித அமைவிடமாக இந்த ஆலயம் உருவெடுத்திருக்கிறது. இந்த நாள்வரை தனது தெய்வத் திருமகனிடமிருந்து அன்னை வெட்ரானா கேட்டுப் பெற்றுத் தந்த அதிசய நிகழ்வுகள் ஏராளமானதாகும்.

# குருக்களுக்கான வருடாந்த தியானம்



எமது மட்டக்களப்பு மறைமாவட்டக் குருக்களுடன் சொமஸ்கன் சபைக் குருக்களும் இணைந்த குழுவானது 14.02.2016 அன்று கண்டி மாநகருக்குப் புறப்பட்டது. வருடாந்த தியானத்திற்கான இப்பயணம் கண்டி – 'மொன்டே பானோ' இல்லத்தில் முடிவுற்றது. அங்கு எமது மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் அதிவந். யோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் 15.02.2016 முதல் 20.02.2016 வரையிலான ஐந்து நாட்கள் இத்தியானம் இடம்பெற்றது. இந்தியா – தமிழ்நாட்டைச் சேர்ந்த அருட்தந்தை சில்வெஸ்டர் குருஸ் அடிகளால் உரைகள் வழங்கப்பட்டன. குருத்துவம் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் உரைகள் அமைந்திருந்தன. இந்தத் தியானமானது ஆன்மீக எழுச்சி மிக்க தியானமாக அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

விழுந்ததுதான் தாமதம், அவர் பிடியை இடறி, கரையை நோக்கி வேகமாக நீந்தினான்.

அதனைப் பார்த்த அந்த மனிதருக்கே ஆச்சரியமாயிருந்தது.

எதுவித பிடிப்புமின்றித் தனியே நீந்தப் பயந்தவன், அச்சம் நீங்கியவனாய், கை கால்களை வேகமாக அசைத்து நீச்சலடித்துக் கரைசேர்ந்தான்.

அம்மா கையிலிருந்த தடியை ஓங்கிக்கொண்டு துரத்த, 200 யார் ஓட்டப் பந்தயத்தில் முந்தியோடும் வீரனைப்போல் ஓடி மறைந்தான், சிவராமன். •••



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்துகொள்ள....

**பூகம்பத்தின்போது ரிக்டர் அளவு அதிகமானால்தானே சேதமும் அதிகமாகும் .....!**

**அறிவியல் ரீதியாக நோக்கும்போது இந்தக் கருத்து உண்மையாக இருக்கலாம். இருப்பினும் அளவுக்கும், அழிவுக்கும் சம்பந்தமில்லை என்பதை வரலாறு பலமுறை நிருபித்திருக்கிறது. உதாரணமாக, 17.07.1976ல் சீனாவின் டங்ஷான் பகுதியில் ஏற்பட்ட பூகம்ப அளவு 7.5 ரிக்டர்தான். இந்த அளவு சேதம் விளைவிக்கக்கூடிய பெரிய பூகம்பத்தைக் குறிக்கும் என்றாலும், மாபெரும் பேரழிவு பூகம்பத்தை அல்ல. ஆனால், அப்போது பல நகரங்கள் தரை மட்டமாகி, கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் பேர் பலியானார்கள். இது வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட பேரழிவு பூகம்பங்களில் முக்கியமானது.**



# புத்தாண்டு

### கடுகுக் கதை - 72

அன்ரனின் இளைய மகன் எப்பொழுதும் 'தொண, தொண...' வென்று கேள்விகள் கேட்டுக்கொண்டே இருப்பான். அன்ரனின் தாயார் இந்து. எனவே, அன்ரனின் வீட்டில் கிறிஸ்தவ விழாக்கட்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் இந்து விழாவுக்கும் இடமுண்டு.

அன்ரனின் தாயாரிற்கு சித்திரைப் புத்தாண்டு உடுப்புக்கள் எடுக்கும்போது அன்ரனின் பிள்ளைகட்கும் எடுப்பது வழக்கம்.

"அப்போய் ...... ' அன்ரனின் மகன் கூப்பிட்டான்.

"என்ன ஜெபி...."

"சமயங்கள் கனக்க பிரிச்சிருப்பதால நன்மையா, தீமையா....?"


இவன் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கிறான் என்று அன்ரனுக்கு விளங்கவில்லை.

"அப்பா ..... தீமை எண்டுதான் முந்தி நினைச்சனான்.... ஒற்றுமை குலையும் எண்டுதான் எண்ணினனான்..... ஆனா, இப்ப நல்லம் எண்டு நினைக்கிறன்......"

"ஏன்டாப்பா....."

"நிறைய சமயங்கள் இருந்தா நிறைய விழாக்கள் வரும். எல்லாரும் எல்லா விழாக்களிலும் கலந்து கொண்டா ஒற்றுமை வளரும். எனக்கு தை மாசமும் புதுவருசம், சித்திரையிலும் புதுவருசம்..... இரண்டு சோடி உடுப்பு வருமல்லவா....?"

அன்ரனுக்கு மகனின் லொஜிக் தலையைச் சுற்ற வைத்தது.....



— பற்றி —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் கோபுரம் நான்
ஆவலுடன் பேசுகின்றேன்!
ஞாலமிதில் நற்கருணை
நாதரிங்கே தனிமையானார்!
ஞாலத்தின் பாவங்களை
துடைப்பாரே இயேசுநாதர்
ஏலமிட்டே வன்மங்களை
ஏனையா கூட்டுகின்றீர்!

நாளொரு செபமாலை சொல்வீர்
நலம் தருவார் கன்னிமரி
தோளொடு தோளே தந்தே
சுமை குறைப்பார் இயேசுவுந்தான்!
கூடொடு வாழ்க்கை தள்ளும்
குவலயத்தில் உள்ளவரை
அருளோடு அன்பு தந்தே
அரவணைப்பார் நற்கருணைநாதர்!

எத்தனை முறைகள் தான்
எனைக் கடந்தே செல்கின்றீர்!
செத்தபின் உயிர்த்தவர்தான்
செகம் போற்றும் இயேசுமகான்!
உத்தமர் நீங்களென
ஊரெல்லாம் கூறுகின்றீர்!
முத்தமது கொடுக்க வாரீர்
முள்முடி வேந்தனுக்கே!

திருச்சபை என்ன செய்யும்
திருகு தாளக்காரர்களால்!
வருத்தமுற்று வாய்பேசா
மடந்தையாக நிற்கின்றதே!

## சபை உரையாளர் நூலிலிருந்து ...

**வாழ்க்கையைப் பற்றிய எண்ணங்கள் :**

விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை விட நற்புகழே மேல்.
பிறந்த நாளைவிட இறக்கும் நாளே சிறந்தது.
விருந்து நடக்கும் வீட்டிற்குச் செல்வதைவிடத் துக்க வீட்டிற்குச் செல்வதே நல்லது.
ஏனெனில், அனைவருக்கும் இதுவே முடிவு என்பதை உயிருடன் இருப்போர் அங்கே உணர்ந்துகொள்வர்.
7:1-2

ஒரு தரமாவது இயேசுவை
உளமார தோத்தரிப்பாய்!
வரும் துன்பம் அகன்றிடுமே
வா மகனே! என்னருகே!

நற்கருணை சந்திப்பாலே
நற்சுகம் அடைந்திடுவாய்!
உற்ற சுதன் ஆனவரை
ஒரு தடவை தோத்தரிப்பாய்
பற்பல பணி விடைகள்
பார்க்கின்றாய் தினமுந்தானே
சற்றெனவே ஒரு தடவை
தாள் பணிந்தே செல்மகனே!




- கலைக்கோட்டன் அ. இருதயநாதன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒளியை அறியில் உருவும் ஒளியும்
ஒளியும் அருவம் அறியில் அருவாம்
ஒளியின் உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருக உடன் இருந்தானே

வெந்தயம் என்றவுடன் அது மூலிகையா? என்று நம்மை ஆச்சரியப்படுத்தும் சில செய்திகள் நாம் தீர்மானித்து வைப்பதைவிட மாறுபட்டு இருக்கும். அதுவே உலக இயற்கை. உணவு பொருளாகவும், கீரையாகவும் நாம் அறிந்திருக்கும் வெந்தயம் சிறந்த மூலிகையாகும். கொத்துகொத்தான மூன்று இலைகள் கொண்ட சிறுசெடி. பூக்கள் வெள்ளை நிறத்துடன் இருக்கும். விதைகள் மஞ்சள் நிறம் உடையது. கீரைக்காகவும், விதைக்காகவும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பயிர்செய்யப்படுகிறது. விதை இலை மருத்துவ குணமுடையது.

நீரிழிவுநோய் உள்ளவர்கள் இன்று வெந்தயக்கீரையைச் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். உணவே மருந்து என்று வாழும் தமிழகத்தில் வெந்தயத்தை வடவம் செய்து குழம்பு தாளிப்பதற்கும், துவையல் செய்தும் பயன்படுத்தி வருகின்றனர். இதைச் சாப்பிடுவதால் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்படும் உடல் சூட்டைச் சமன்செய்யும். நன்கு செரிமானம் ஆகும். பெண்களின் மாதவிடாய்ப் பிரச்சனையை தீர்க்கும். இலைகள் மலத்தை இளக்கி உடலின் வெப்பத்தைக் குறைக்கும்.

வயிற்று உப்பிசம், மாந்தம், வலிபெருக்கு, சுவையின்மை தீரும். வெந்தயக் கீரையை வேகவைத்துத் தேன்விட்டுக் கடைந்து சாப்பிட மார்பு வலி உடலின் உட்புண்கள் ஆறும். வெந்தயக்கீரையுடன் அத்திப்பழம், பன்னீர் திராட்சை, சம அளவில் சேர்த்துக் குடிநீரிட்டுத் தேன் கலந்து சாப்பிட மார்புவலி மூச்சு டைப்பு போகும். வெந்தயம் திசுக்களை இறுகச் செய்தல், குடல்வாயு தணித்தல், சிறுநீர் பெருக்குதல், மாதவிலக்கை தூண்டுதல், நீரிழிவுநோயைக் குணப்படுத்துதல் உட்பட ஏராளமான நன்மைகளைச் செய்யக்கூடியது.

ஆறாத தீப்புண் உள்ளவர்கள் வெந்தய இலைகளை அரிந்து ஒரு இரும்புக் கரண்டியில் போட்டு நெருப்பில் வதக்கி இளம் சூட்டில் வைத்துப் பற்றிடக் காயங்கள் ஆறும். சில பெண்களுக்குக் குழந்தை பிறந்த பிறகு தாய்ப்பால் போதிய அளவு கிடைக்காமல் துன்பப்படுவார்கள். இவர்கள் 5 கிராம் வெந்தயத்தை இரவு ஊறவைத்து, காலையில் வேகவைத்து அதில் சிறிது தேன் கலந்து கடைந்து குடித்து வந்தால் தாய்ப்பால் பெருகும்.

# நோய் நீக்கும் வெந்தயம்

## மருத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்தயக்கீரையை வேகவைத்து வெண்ணெயிட்டு வதக்கிச் சாப்பிடத் தீப்புண் ஏற்பட்டவர்களுக்கு மயக்கம் நீங்கிக் குணம் உண்டாகும். உடலில் ஏற்படும் கட்டிகள் பழுத்து உடையாமல் வேதனை கொடுத்தால் கைப்பிடி வெந்தயம் அதே அளவு சீமையத்திப் பழம் சேர்த்து மையாக அரைத்துத் தண்ணீரில் குழப்பினால் பசைபோல் வரும். இதை இருப்புச் சட்டியில் போட்டு அடுப்பில் வைத்துக் கிளறி கட்டியில் வைத்து இரவு கட்டினால் காலையில் அது பழுத்து உடையும்.

வேக வைத்த வெந்தயக்கீரையுடன் வாதுமைப்பருப்பு, கசகசா, கோதுமைப்பால், நெய் நாட்டுச்சர்க்கரை சம அளவு சேர்த்துக் கிளறிச் சாப்பிட உடல் வலுக்கும். இடுப்புவலி நீங்கும். கடுமையான வயிற்றுப் போக்கு ஏற்படும் காலங்களில் 10 கிராம் வெந்தயத்தை நெய்யில் வறுத்து, அதனுடன் உப்பு, பெருஞ்சீரகம் சிறிதளவு சேர்த்து அரைத்து மோரில் கலந்து குடித்தால் வயிற்றுப்போக்கு தீரும்.

உடலில் இரத்தத்தின் அளவு குறைவாக உள்ளவர்கள் வெந்தயம் 17 கிராம், 340 கிராம் பச்சரிசியுடன் சேர்த்துப் பொங்கல் செய்து சாப்பிட, இரத்தம் உடலில் பெருகும். வெந்தயத்தை ஊற வைத்துத் தோசை மாவுடன் கலந்து உட்கொண்டு வந்தால் உடலில் ஏற்படும் அனைத்து வலிகளும் நீங்கும்.

வெந்தயத்தை வறுத்துப் பொடி செய்து, ஊறல் போட்டு அந்தத் தண்ணீரைக் குடித்து வந்தால் வயிற்றுப் பொருமல், சுரம், உட்சூடு, வெள்ளை, சீதக் கழிச்சல், நீங்கும். வெந்தயத்தை இரவில் ஊறவைத்துக் காலையில் மையாக அரைத்துத் தலையில் தேய்த்து ஒரு மணி நேரம் சென்றபிறகு தலை முழுகி வர தலைமுடி உதிர்வு நின்று செழித்து வளரும். வெந்தயத்தை வறுத்து அதே அளவு சீரகத்தை வறுத்துச் சம அளவு பொடியைக் காலையில் வாயிலிட்டு தண்ணீர் குடித்து வந்தால் நீரிழிவு கட்டுப்படும். இதைத்தான்,

பொருமல் மந்தம் வாயுகபம் போராடுகின்ற
இருமல் அருசியிவை ஏகுந் தரையில்
தீது லுயர்நமனைச் சீறும் வழியணங்கே
கோதில்வெந்த யக்கீரை கொள்
பிள்ளை கணக்காய்ச்சல் பேதசீ தக்கழிச்சல்
தொல்லை செய்யும் மேகம் தொலையுங்கான் -
உள்ளபடி
வெச்சென்ற மேனி மிகவுங் குளிர்ச்சியதாம்
அச்சமில்லை வெந்தயத்திற் காய்

என்கிறார் அகத்தியர்.

வெந்தயம் என்றவுடன் அதன் கசப்புச் சுவையால் பெரும்பாலானவர்கள் அதைச் சாப்பிடாமல் ஒதுக்கி வைத்து விடுகின்றனர். கசக்கும் என்று அதை ஒதுக்கி விடாமல் வேண்டிய மட்டும் சாப்பிட்டால் என்ன நன்மை கிடைக்கும் என்பதை ஆராய்ந்து நமக்கு சொன்ன முன்னோர்கள் வழியில் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி நாளும் நலமுடன் வாழ்வோம்.

- நன்றி : **இணையம்** -




சிறந்த மனித நேயப் பணிக்கான "V" விருதினை எமது மண்ணின் மைந்தன் அருட்தந்தை. போல் சற்குணநாயகம் இயேசுசபை அடிகள் பெற்றுள்ளார். சமூக சேவைகள் அமைச்சு, UN, UNDP, NEWS 1st ஆகிய அமைப்புகள் இணைந்து தன்னார்வத் தொண்டருக்கான "V" விருதினை வழங்கி வருகின்றனர். 2015ம் வருடத்திற்கான விருது எமது அருட்தந்தைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் நடைபெற்றபோது, உள்நாட்டு, வெளிநாட்டவருடன் அரசியல் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்ததும் குறிப்பிடத்தக்கது. அருட்தந்தையவர்கள் தனது இளம் பராயம் முதல் இன்றுவரை செய்துவரும் தன்னலமற்ற தொண்டானது உலகம் முழுவதும் வியாபித்துள்ளது என்றே கூறவேண்டும். பல நிபுணர்கள், கல்விமான்கள் என இவரால் உருவாக்கப்பட்டுள்ளனர். அருட்தந்தையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவருக்கு ஆன்ம, சரீர, உள நலன்களை இறைவன் அளித்து அவரது பணிகளைத் தொடர ஆசிர்வதிக்கவும் இறைஞ்சி நிற்கின்றோம்.

**நிர்வாகம் - தொண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் சுமைகள் ஏராளம். யாருக்குத்தான் சுமைகள் இல்லை. தூக்க முடியாமல் துன்பப்படுகின்றோம். சுமைகள் வேண்டாம் என்றிருந்தாலும் இந்தப்பாழாய்ப்போன மனசு சுமைகளைத் தானே வலிந்து தேடிக்கொள்கிறது. நுகர்வுக் கலாசாரம் தலைதூக்கி நிற்கும் சமூகம். வர்த்தக விளம்பரங்கள் நம்மை முட்டாள்களாக்கித் திரும்பத் திரும்பக் கடன் சுமைகளை ஏற்றி ஏற்றி நம்மை அமுக்கிக்கொண்டே போகின்றன. போலி அந்தஸ்து, கௌரவங்களுக்காகத் தவறென்றும், பிழையென்றும் தெரிந்த பின்பும்கூட நம்மால் தவிர்க்க முடியாமல் சுமைகளை நாமே மேலும் மேலும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் பழக்கப்பட்டவர்களாகிவிட்டோம்.

ஒரு பொய்தானே என்று சொல்லிவிட்டு, பின்னர் அதை மறைப்பதற்காக ஆயிரம் பொய்களைச் சொல்வதைப் போன்று, ஒரு பொருளுக்கு ஆசைப்பட்டு கடன்வாங்கி அதைக் கொள்வனவு செய்து வீட்டில் வைத்துவிட்டு, வாங்கிய கடனால் ஏற்படும் பின் விளைவுகள் ஒன்றின் மேல் ஒன்றாக வளர்ந்துகொண்டு, தூக்கத்தைக் கெடுத்து மன நிம்மதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு, கடன்காரனைக் கண்டால் ஓடி ஒழிந்து கொள்ளும் ஏமாற்றுப் பிழைப்பு எத்தனை நாட்களுக்குத்தான் தாக்குப் பிடிக்கும்?




~ L அலெக்சாண்டர் ~

சுமைகளைக் குறைக்க வழி தேடுவோம். “சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்கிறார் இயேசு ஆண்டவர்.

ஒரு பங்குக் குருவானவர் தனது மறையுரையில், “உங்கள் சிலுவைகளை ஆண்டவர் ஏற்றுக்கொள்கிறார். உங்களுக்கு அவர் ஆறுதல் அளிக்கிறார்” என்று தன் பங்கு மக்களுக்காக ஆற்றிய மறை உரையின் முடிவில், “நாளை நீங்கள் திருப்பலிக்கு வரும்போது உங்கள் சிலுவைகளைச் சுமந்து வந்து ஆண்டவருடைய பாதத்தில் வைத்துவிட்டுச் செல்லுங்கள்” என்று மறையுரையை முடித்துக்கொண்டார். மறுநாள் அனைவரும் திருப்பலிக்கு வந்தனர். ஒருவர் மட்டும் தன் முதுகில் எதையோ சுமந்தவராகத் தள்ளாடித் தள்ளாடி வந்துகொண்டிருந்தார். பங்குத் தந்தைக்கு ஆச்சரியம். அருகில் வந்ததும் அச்சுமை ஒரு பெண் என்பதைக் கண்டு அவரைப் பார்த்து, “என்னங்க நீங்க ஒரு பெண்ணைச் சுமந்து வாறீங்க....” என்று கேட்டதற்கு அவர் சொன்னாராம், “இவ என்ட மனைவி சாமி. நீங்கதானே சொன்னீங்க. உங்கட சிலுவையெல்லாம் சுமந்து வந்து ஆண்டவர் பாதத்தில் வச்சிட்டுப் போங்க என்று, இவதான் எனக்குப் பெரிய சிலுவை சாமி. அதான் ஆண்டவர்ர பாதத்தில வச்சிட்டுப் போகலாமென்று சுமந்து வந்தன்” என்று சொன்னாராம்.

நமக்குப் பிடிக்காதவைகளை இழக்க நாம் எப்போதும் தயாராக இருக்கிறோம். தவறானவைகளாக இருந்தாலும் நமக்கு விருப்பமானவையாக இருந்தால் அதை இழக்கத் தயாராக இருப்பதில்லை. தவறானவைகளை விருப்பங்களாக ஏற்றுச் சுமைகளையும், பாரங்களையும், அதிகரித்துக்கொண்டு நிம்மதியற்ற வாழ்க்கையைச் சுமந்துகொண்டிருக்கிறோம்.

திருமுழுக்கு யோவான், வீணான சுமைகளைச் சுமந்து கொண்டு இருப்போர் கிறிஸ்துவைச் சந்திக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவ நிந்தனை சட்டத்தில் மாற்றம் வரும்

**- பாகிஸ்தான் ஆயர் நம்பிக்கை -**



**பா**கிஸ்தானில் அண்மையில் இடம்பெற்றுவரும் நல்ல மாற்றங்களைக் காணும்போது, அந்நாட்டின் தேவ நிந்தனைச் சட்டத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றம் உருவாகும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளதென்று பாகிஸ்தான் கத்தோலிக்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பாகிஸ்தானின் தேவ நிந்தனைச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில், பல கிறிஸ்தவர்கள் சிறைத் தண்டனை பெற்றுள்ள நிலையில், அச்சட்டத்தைத் திருத்தி அமைக்க சில இஸ்லாமியத் தலைவர்களே முன்வந்திருப்பது நல்ல நம்பிக்கையைத் தருவதாக உள்ளது என்று லாகூர் பேராயர் செபாஸ்டின் பிரான்சிஸ்கூஷா அவர்கள் கூறினார்.

பாகிஸ்தானின் இஸ்லாமிய கருத்தியல் அவையின் தலைவர், முகம்மத் கான் ஷெரானி அவர்கள் தேவநிந்தனைச் சட்டத்தைத் திருத்தி அமைக்க முன்வந்திருப்பது இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப் படுவதைத் தடுப்பதுடன், அப்பாவி மக்களின் வாழ்வைச் சிதைப்பதையும் தடைசெய்யும் என்கிறார் பேராயர் பிரான்சிஸ்கூஷா.

# அன்பியம் ஒரு தேசியம்

அன்பியம் அழகானதோர் குவலயம் - அதில்
அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுமியம் - அது
பண்பியம் பயின்றிட வைக்கம் கலையகம் - அதில்
அனைவரும் பயில்வதென்பது பணிவான விழுமியம்

அறியாத பலர் ஒன்றுகூடி கட்டியெழுப்பும்
அத்திவாரத்தின் அடிப்படைத்தளம் - அங்கே
பயணித்திடும் தனி மனிதர்களெல்லாம் குழுவான
தன்னகத்தே ஈர்த்திடும் இறுகக்கட்டிய கட்டிடம்

அன்பு நீதி சமத்துவம் சமாதானம் வாழுமிடம்
அநாதைகளென யாருமின்றி அன்புடன் அணைத்திடும்
புதியதோர் திருச்சபையை எடுத்தாளத்துடிக்கும்
இறைவார்த்தைகளைப் பகிர்ந்தளித்திடும் செயலகம்.

அன்பியம் வளர்த்தே அனைவரும் பண்புடனும்
அதன் பணி சிறந்திட தேசியப் பாங்குடனும்
அதனை எட்டியே நடைபோட்டு கம்பீரத்துடன்
தலைநிமிர்ந்தே நடக்க வைத்திடுவோம் இந்த தேசத்தில்.



- பீ. ஜ. கைடிபோன்கலன் -

முடியாதென்கிறார். அந்த அழைப்பை உணர்ந்த மக்கள் ''நாங்கள் என்ன செய்யவேண்டும்'' என்று கேட்டனர். அதற்குத் திருமுழுக்கு யோவான், ''உண்மையாகவே மனந்திரும்பி, ஆண்டவருடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து, பிறர் அன்புச் செயல்களில் ஈடுபட்டு உங்கள் சுமைகளை எளிதாக்குங்கள்'' என்கிறார். உலக இச்சைகளால் ஈர்க்கப்பட்டு, அதுவே வாழ்க்கை என்றில்லாமல், நிலையான வாழ்க்கைக்காகவே நம்மைத் தயார்ப்படுத்துவோம்.

■■■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கு செல்வோம்

- ஆன் ரூபினி -

அப்புச்சி இறந்து எட்டாம் நாளாகி விட்டிருந்தது. அப்புச்சி இறந்தது சோகம் மட்டுமல்ல, அதிர்ச்சியும்கூட. நம்மோடு கதைத்து, சிரித்து, நடந்து, அழுது, கதை சொல்லி, T.V பார்த்து, சாப்பிட்டு, புத்தி சொல்லி எப்படியெல்லாமோ இருந்த அப்புச்சி திடீரென, மிகத் திடீரென எதிர்பார்க்காமலே இல்லாமல் போனதை நம்பவே முடியவில்லை இன்றும்கூட.

பக்கத்து வீடு சித்தியின் வீடு. அப்புச்சியின் இறுதிச் சடங்கு நடந்தது அங்குதான். எல்லோரும் சித்தியின் வீட்டில் இருக்கிறோம். எனக்கு எட்டு வயது இருக்கும்போது வாங்கிய சீரியல் பல்ப் செட் ஒன்றை ஜூட் அண்ணா வீட்டில் இருந்து சித்தி வீட்டிற்கு எடுத்து வருகின்றான்.

"என்ன ஜூட்டான் ..... பல்ப் செட் என்னத்துக்கு?" நோனாச் சித்தி கேட்கிறார்.

"இல்ல சித்தி இது இடைக்கிடை பல்ப் சிலது வேல செய்யுதில்ல. அதுதான் குப்பைக்குள்ள போடுவம் எண்டு"

"கொண்டு வா நான் set பண்ணிப் பாக்கிறன்"

நோனாச் சித்தி ஜூட் அண்ணாவிடமிருந்து பல்ப் செட்டை வாங்கி repair பண்ண ஆரம்பிக்கிறார்.

நான் computer இல் ஏதோ முக்கியமான notes ஒன்றைப் பதிவிறக்கம் செய்ய முனைகிறேன். standard English இல் அந்த notes இருந்தது. select பண்ணி copy பண்ணும்போதுதான் தெரிந்தது இடையில் ஒரு பந்தி இல்லை! வெறுமையாக இருந்தது. முதலில் இருந்து வாசித்துப் பார்க்கிறேன், புதுப்புது vocabs. எதுவுமே புரியவில்லை.

யூடிச் சித்தி வருகிறார்.

"என்ன ஏதும் பிரச்சினையா?"

"ஓம் சித்தி, இடையில் கொஞ்சம் நோட்ஸ் இல்லாமல் இருக்கு".

"எங்க பாப்பம்"

இருவருமாக oxford dictionary யுடன் computer இல் விளக்கம் தேடுகின்றோம். பகீரதப் பிரயத்தனம்.

அந்த வெற்றிடத்தில் என்ன வரும் என்பதை ஊகிக்கக்கூட முடியவில்லை.

"இந்த நேரத்தில அப்புச்சி இருந்திருந்தா சொல்லித் தந்திருப்பார்"

யூடிச் சித்தியின் கண்கள் கலங்கியிருக்கின்றன.

நான் கூட யோசித்துப் பார்க்கிறேன். அப்புச்சி ஒரு ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர். எப்பேர்ப்பட்ட doubt கேட்டாலும் உடனே சொல்லித் தருவார். எந்த vocab கேட்டாலும் உடனே அர்த்தம் சொல்வார். ஊர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டுமல்ல பேரப்பிள்ளைகளுக்கும் அவர்தான் ஆங்கில tution ஆசிரியர்.

ஆங்கிலமொழியில் அப்புச்சிக்கு இருந்த புலமை கண்டு பல நாட்கள் வியந்திருக்கிறேன். ஆங்கிலத்தில் letter ஏதும் எழுதுவதென்றால் உடனே அப்புச்சிதான். ஆங்கிலத்தில் என்ன எழுதுவதென்றாலும் பேரப்பிள்ளைகள் மட்டுமல்ல, அவர் பிள்ளைகள்கூட அப்புச்சியிடம்தான் தஞ்சம்.

'இப்பவும் அப்புச்சி இருந்திருந்தா ...'

யோசித்துக்கொண்டிருக்க அப்புச்சி வந்தார்! இறக்கும்போது கட்டியிருந்த அதே brown colour சாரன். இறப்பதற்கு முன்பிருந்த அப்புச்சியின் கொஞ்சம் குண்டான தோற்றம்.

"என்ன விளங்காம இருக்கு?"

அப்புச்சியைக் கண்ட ஆச்சரியத்தில் கண்கள் அகல, கால்கள் தன்னையறியாமலே கதிரையைவிட்டு எழுந்து நின்றன.

அனைவரும் மலைத்து நிற்க அப்புச்சி சலனமே இல்லாமல் தன் பணியில் கூட்டெழுத்துக் களுடன் கூடிய கையெழுத்தில் பந்தியைத் திருத்திக் கொண்டிருந்தார். கைகால்கள் பயத்தில் குளிர்ந்து உறைய, வந்திருப்பது அப்புச்சிதானா? பேயா? கால்கள் உண்டா? புகைபோல இருக்குமா? தொட்டுப் பார்க்கலாமா? என்ற தொடர் கேள்விகள் எண்ணத்தில் சரளமாய் வந்துகொண்டே இருந்தன எல்லோருக்கும்.

தன் வேலையை முடித்து நிமிர்ந்தவரை "அப்புச்சி" என்று கண்கள் கரைய கைகளைப் பிடித்துக்கொண்டேன்.

"நீங்க எப்பிடி இங்க வந்தனீங்க...? நீங்க செத்து மேல போகலியா? மேல யார் யாரெல்லாம் இருந்தாங்க? என்ன நடந்தது அங்க...?"

என்று சிறு வயதில் பார்த்த, படித்த சமய விடயங்களுக்கு விடை காண முற்பட்டேன்.

"அங்க எல்லாரும் இருந்தாங்க... நானும் போனன். உங்க எல்லாரையும் ஒருக்கா பாப்பம் எண்டுதான் வந்தனான்".

அப்ப எப்பிடி உங்களைப் போக விட்டவங்க? இயேசுநாதர் என்ன சொன்னவர்? சூசையப்பரும், மாதாவும் இருந்தவங்களா...? பேதுருவானவரிட்டதானா திறப்பு இருக்கு. அவர் நடுவுல திறப்ப வச்சிட்டுக் கதிரயில இருக்க இரண்டு line லயும் பூமியில செத்துப் போற ஆக்கள் போய்க்கொண்டிருக்கிறாங்களா? பாவிகளுக்கு என்ன தண்டனை குடுக்கிறாங்க? நல்லாக்களுக்குத் தனி room எல்லாம் குடுத்திருக்கிறாங்களா?"

உயிரோடு இருக்கும்போது நம்மால் விடை காண முடியாத கிறிஸ்தவ நம்பிக்கைகள் கேள்விகளாய்த் தொடர, ஆர்வத்துடன் விடைகளுக்காய் அப்புச்சியை நோக்கினேன்.

"அதெல்லாம் உங்களுக்கு இப்ப சொல்ல ஏலாது. சொல்லுறதுக்கு எனக்கு அதிகாரமும் இல்ல. அது உங்களுக்குப் பிறகு விளங்கும். நல்லவங்களா இருக்கப் பாருங்க"

என்று சொல்லிக்கொண்டே வீட்டைவிட்டு வெளியேற முற்பட்டார்.

நான் இடைநிறுத்தி,

"அப்ப நானும் உங்களோட வாறேனே .... வந்து அங்க என்ன நடக்குதெண்டு பார்க்கப் போறேன்" என்றேன்.

"சீ சீ.... சின்னப் பிள்ளைகள் அங்கெல்லாம் வரக்கூடாது. நீ இன்னும் வாழவேண்டிய காலம் நிறைய இருக்கு. அங்க வந்து என்ன செய்யப் போறா?"

என்று அவர் கையைப் பற்றியிருந்த என் கையை விடுவித்துக்கொண்டே வாசல் நோக்கி நடந்தார்.

வாசலில் நின்று திரும்பி ஒருதரம் அனைவரையும் பார்த்துவிட்டுப் பாதையின் இருமருங்கும் மாறி மாறி அவர் எதையோ தேட, எங்கிருந்தோ வந்த பனி மூட்டம் பாதையை மூடியது. அப்புச்சியைக் காணவில்லை.....!!

**— (யாவும் கற்பனையல்ல) —**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஏப்ரல் – 2016



### ஏப்ரல் 10ந் திகதி : புனித புல்பெர்ட்

இவர் 952ம் வருடம் அல்லது 960ம் வருடத்தில் பிறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. புல்பெர்ட் பிரான்ஸ் நாட்டின் லாடன் மறைமாவட்டத்தில் பிறந்தார். ஆரம்பக் கல்வியைப் பிரான்ஸ் நாட்டு ரீம்ஸ் நகரில் கற்றார். ஜெர்பர்ட் என்ற ஆசிரியரின் அன்பும், அறிவுத் தெளிவும் இவருக்குக் கிடைத்தது. இவரது ஆசிரியர் ஜெர்பர்ட் பிற்காலத்தில் 999ம் வருடம் சில்வெஸ்டர் என்ற பெயரில் திருத்தந்தையானார். புல்பெர்ட் 990ம் வருடம் சார்ட்ரெஸ் நகரில் பாடசாலை ஒன்றை நிறுவினார். அது விரைவில் பிரசித்திபெற்றது. இத்தாலி, ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுக ளிலிருந்து மாணவர்கள் வந்து இங்கு கற்றனர். மாணவர்கள் இவரை “வணக்கத் துக்குரிய சோக்கிரட்டீஸ்” என அழைத்தனர். சார்ட்ரெஸ் நகர ஆலயத்தின் தலைமைச் செயலாளராகவும், போய்டியர்சில் இருந்த ஹிலாரி ஆலயத்தின் காப்பாளராகவும் திகழ்ந்தார். 1007ம் வருடம் புதிய ஆயராக இவர் தெரிவுசெய்யப்பட்டார். ஆயரான பின்பும் பாடசாலை ஆசிரியராகவும், புனித ஹிலாரி ஆலய கருவூலக் காப்பாளராகவும் தொடர்ந்தும் பணியாற்றினார். சார்ட்ரெஸ் நகரப் பேராலயம் 1020ம் வருடம் சமூக விரோதிகளால் தீயிடப்பட்டு அழிவுற்றது. அதைப் புதுப்பொலிவு பெறச்செய்யப் புதுப்பிக்கும் பணியை முன்னெடுத்தார். அனைவரும் தடையின்றி இவருக்கு உதவினர். இங்கிலாந்து அரசருட்பட ஐரோப்பா முழுவதிலும் இருந்து உதவிகள் கிடைத்தன. துறவியரில்லத் தலைவரா கவோ, உறுப்பினராகவோ இருந்த எந்த அனுபவமும் இல்லாவிட்டாலும் துறவியர் மீது அளவுகடந்த அன்பும், பாசமும் வைத்திருந்தார். குருக்களின் அன்றாட வாழ்க்கை முறைகளை ஒழுங்குபடுத்தினார். இவர் எழுதிய பாடல்கள், சுற்றுமடல்கள் இன்றும் இருக்கின்றன. சிறப்பாகப் பணிபுரிந்த புல்பெர்ட் 1029ம் வருடம் சித்திரைத் திங்கள் 10ந் திகதி இறைவனடி சேர்ந்தார்.

### ஏப்ரல் 24ந் திகதி : புனித பிதேலிஸ்



மார்க் ரே எனும் இயற்பெயர் கொண்ட இவர் புருசியாவில் அதாவது தற்போதைய ஜெர்மனியில், சிக்மரிங்கன் எனுமிடத்தில் 1577ம் வருடம் பிறந்தார். தந்தையின் பெயர் யோவான் ரே என்பதாகும். ரேபர்க் எனுமிடத்தில் மெய்யியல் பயின்றார். கல்வி கற்ற பல்கலைக்கழகத்திலேயே மெய்யியல் பேராசிரியராகப் பணியாற்றி மாணாக்கரின் நன்மதிப்பைப் பெற்றார். சட்டப்படிப்பை முடித்து முனைவர் பட்டமும் பெற்றார். பிதேலிஸ் 1604ம் வருடம் ஐரோப்பாவின் முக்கிய இடங்களுக்குப் பயணித்த 3 சுவிற்சலாந்து இளைஞருடன் புறப்பட்டு 6 ஆண்டுகள் செலவிட்டபோது ஆங்காங்கே திருப்பலிகளில் பங்கெடுத்தார். இயேசுகிறிஸ்துவின் மனநிலை பெறச் செபித்தார். வைத்தியசாலைகள், ஆலயங்களைத் தரிசித்தார். நற்கருணை ஆண்டவர் முன் பல மணிநேரம் செலவிட்டார். தன் ஆடைகளை ஏழைகளுக்குக் கொடுத்தார். சுவிற்சலாந்து திரும்பியதும் ஆல்சாக்கில் உள்ள கல்மார் எனுமிடத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றினார். பின் கப்புச்சின் சபையில் சேர முடிவெடுத்தார். அங்குதான் மார்க் ரே எனும் பெயர் பிதேலிஸ் என்று மாற்றம் செய்யப்பட்டது. இதன் பொருள் ‘நம்பிக்கைக்குரியவர்’ என்பதாகும். குருத்துவ அருட்பொழிவு

– தொடர் 22ம் பக். ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கத் திருமறை

க.பொ.த. சா/தர மாணவர்களுக்கானது

தரம் - 11

பாடங்கள் 9-10 பகுதி - 01

• போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

**36. கிறிஸ்தவ வாழ்வை வெற்றிகரமாக்கிக் கொள்ள நமக்குக் கிடைக்கும் உதவிகள்:**
தூய ஆவியின் கொடைகள்.

**37. நாம் இறைவனோடு ஒப்புரவாகும் வரத்தை எதன்மூலம் பெற்றுக்கொண்டோம்?**
கிறிஸ்துவில் பாஸ்கா மறைபொருளின் பலன்களினால்

**38. வருடத்திற்கு ஒருமுறையாவது நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்வாயாக என்பது திருச்சபையின் எத்தனையாவது கட்டளை?**
திருச்சபையின் இரண்டாவது கட்டளை.

**39. ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் நமது வாழ்வில் முழுமையான மாற்றத்தை உருவாக்கிக் கொள்ளத் தேவையானது எது?**
உள்ளார்ந்த மனமாற்றம்

**40. இயேசுவின் காலத்தில் மனம் வருந்துத லின் முக்கியத்துவம் தொடர்பாக மக்களை விழிப்புணர்வு பெறச் செய்தவர்:**
திருமுழுக்கு யோவான்

**41. பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரம் உண்டு என்பதைக் காட்ட இயேசு செய்த புதுமைகள்:**
- முடக்குவாதக்காரனை குணமாக்கியது.
- பாவிப் பெண்ணை மன்னித்தது.
- 38 வருடம் குளத்தருகில் இருந்தவர் குணமடைதல்.
- சூம்பிய கையன் குணமடைதல்.

**42. ஒப்புரவு அருளடையாளத்திற்கு வழங்கப் படும் வேறு பெயர்கள்:**
- பச்சாத்தாபம்
- மன்னிப்பளிக்கும் அருட்சாதனம்
- ஒப்புரவு
- பாவசங்கீர்த்தனம்

**43. உறுதிப்பூசுதல் திருவழிபாட்டின் பிரதான சந்தர்ப்பமாக விளங்குவது எது?**
திருத்தைலம் பூசி அபிஷேகம் செய்தல்.

**44. மெய்விவாகம் ஆவது:**
வாழ்நாள் முழுவதற்குமான உடன்படிக்கையாகும்.

**45. கத்தோலிக்கத் திருச்சபை மறைநூலின்படி கத்தோலிக்க ஆண் - பெண் மத்தியில் இடம் பெறும் திருமணம் நிறைவேற்றப்படுவது:**
திருப்பலி வேளையிலாகும்

**46. திருமண அடையாளம் பற்றி இயேசுவின் படிப்பினை யாது?**
இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்.

**47. திருமண ஒப்பந்தத்தின்படி ஆணும் பெண்ணும் எவ்வாறு இருக்க வேண்டும்?**
இருவரல்ல ஒருவர் என்ற நிலையில்.

**48. திருமணத்தின் ஆழமான உறவு பெருக என்ன அவசியமானது?**
திறந்த உள்ளம், விசுவாசம்

**49. கிறிஸ்தவத் திருமணம் முடிவடைவது :**
மரணத்துடன்

**50. திருமண வாழ்வின் தூய்மையையும், உடன்படிக்கையையும் அழித்துக் குடும்ப வாழ்வைப் பாதிக்கும் காரணிகள் :**
- நீலப்படம்
- குடிப்பழக்கங்கள்
- ஓரினச் சேர்க்கை
- தீய புத்தகங்கள்

**51. திருமண திருவருட்சாதனத்தில் மணமக்கள் அளிக்கும் வாக்குறுதிகள் எவை?**
இன்பத்திலும், துன்பத்திலும், உடல் நலத்திலும், நோயிலும் பிரமாணிக்கமாய் இருப்போம் என்று

**52. மெய்விவாக அருளடையாளத்தின் வழியாகக் கிறிஸ்து திருமண தம்பதியரை எவ்வாறு ஒன்றுபடுத்துகிறார்?**
திருமணத் தம்பதியரைத் தூய்மையும் பிரிக்க முடியாததுமான உறவில் ஒன்றுபடுத்துகிறார்.

- தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் ஊற்றாக இதயம் வேண்டும்

இரக்கமென்னும் இனிய ஊற்று சுரக்குமிடமாய்
இதயம் இருக்க வேண்டும்
சிரிக்கும் முகத்தின் அழகுஞ்செழிப்பும் சிந்தைக்குள்ளும்
சிறந்து வளர வேண்டும்
எரிக்கும் நெருப்பும் இடரை இருளை இகத்தைவிட்டு
எரித்து அகற்ற வேண்டும்
மரத்தை வளர்த்துக் கனியைப் பறித்துப் பகிர்ந்து உண்ணும்
மனிதம் மலர வேண்டும்!

ஏழை செல்வர் என்ற பேதம் இரக்க விழிப்பில்
இல்லாதொழிதல் வேண்டும்
வாழை போலத் தன்னை ஈந்து வாடுவோர்க்கு
வாழ்வை வழங்க வேண்டும்
கூழினோடு கஞ்சி எனினும் ஏழை பசிக்கும்
கொடுத்து மகிழ வேண்டும்
வாழுங்காலம் சொற்பமெனவே வாழ்வில் இரக்கம்
மனதில் வளர்க்க வேண்டும்!

உலகமெங்கும் உறையும் மாந்தர் உரிமைபெற்று
உயர்ந்து வாழ வேண்டும்
சிலுவை சுமந்து செகத்தின் பவத்தை தீர்த்த
புனித தேவன் உறவு வேண்டும்
அலகை போலும் அகிலந்தன்னில் ஆட்டம் போடும்
அரக்கர் திருந்த வேண்டும்
நலிவுற்றோர் வாழ்வுக்குதவ நமக்குள் இரக்கம்
நாளுஞ் சுரக்க வேண்டும்!

– கவிஞர் நிலா தமிழின்தாசன் –

## புனிதர்களை ....

.... பெற்று 1612ம் வருடம் ஐப்பசித் திங்கள் நான்காம் நாள் புனித பிரான்சிஸ் அசிசியின் திருவிழாவன்று முதற் திருப்பலியை நிறைவேற்றினார். கிரிசன் எனுமிடத்திற்குப் பணிபுரிய அனுப்பப்பட்டார். அங்கிருந்த பலர் கல்வின் பிரிவினைச் சபையில் சேர்ந்திருந்தனர். அவர்களுக்கு இவர் அளித்த மறையுரைகளைக் கேட்டு மீண்டும் கத்தோலிக்க விசுவாசத்துக்கு மீண்டனர். 1622ம் வருடம் சித்திரைத் திங்கள் 24ந் திகதி ஒப்புரவு அருட்சாதனம் பெற்றுத் திருப்பலி நிறைவேற்று கையில் மறையுரை நிகழ்த்தி முடித்த பின் அப்படியே அமைதியாக நின்றார். அவ்வேளையில் அவர் காட்சி கண்டார். பின்பு விரைவில் தான் இறந்து விடுவார் என்றார். அன்றே சீவிஸ் எனும் பகுதிக்குத் தன் தோழர்களுடன் மறைபரப்புக்காகச் சென்று ஓர் ஆலயத்தில் ஒஸ்ரிய வீரர்களின் பாதுகாப்புடன் திருப்பலி நிறைவேற்றினார். அங்கு சீவிஸ் வீரர்கள் வந்து வெளியே வருமாறு பிதேலிசை அழைத்தனர். ஒஸ்ரிய வீரர்களுதவியால் தப்பிய இவர் தான் செய்தது இறை சித்தத்திற்கு எதிரானது என உணர்ந்து திரும்பி வந்து சீவிஸ் வீரர்களிடம் சரணடைந்தார். அவர் காட்சி கண்ட அதேநாளில் பிதேலிஸ் கல்வின் ஆதரவாளர்களால் கொலை செய்யப்பட்டார். 6 மாதங்களுக்குப் பின் இவரது தலை, வலது கை அழியாமல் கண்டெடுக்கப்பட்டது. இவர் கப்புச்சின் சபையின் முதல் மறைசாட்சி ஆவார். 1746ம் வருடம் ஆனி மாதம் 29ந் திகதி திருத்தந்தை 14 பெனடிக்ற் இவரைப் புனிதராக உயர்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்கள் கூறுவதென்ன...?

உலகியலான பௌதிக வாழ்க்கை நிலையற்றது. உலகச் செல்வங்கள் யாவும் நகர்ந்து செல்லும் கார்மேகக் கூட்டங்களைப் போல் கணப்பொழுதில் காற்றிலடிபட்டுச் சென்றுவிடும். சொந்தங்கள், பந்தங்கள் யாவும் சட்டென விலகி விடுவர். ''வீடுவரை உறவு வீதிவரை மனைவி கடைசிவரை யாரோ?'' – இவையெல்லாம் அனுபவ ரீதியான பாடல்கள்.

மனித வாழ்வில் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே மதங்களின் நோக்கம். சத்தியம் எது எனப் புரிந்து உணர்ந்து செயற்படுவது நம் ஒவ்வொருவரின் கடமையுமாகும். இதுவே மதங்களின் சாராம்சமுமாகும். புனிதர்களின் வாழ்க்கை முறைகளும், திருமறை நூல்களும் அனைவரும் அடையவேண்டிய இலக்கு ஒன்றே என நிருபிக்கின்றன. ஆனால், மனிதன் தன் சுயநலத்தின் குறுகிய மனப்பான்மையினால் மதத்தைக் கருவியாக்கிக்கொண்டு மதம் பிடித்தலைவதைப் பார்க்கிறோம்.

எல்லா மதங்களும் நல்லவற்றையே போதிக்கின்றன. ஒன்றே குலம் ஒருவனே தெய்வம். தன் மனம் நல்லதாக அமைந்திருந்தால் எந்த மதம் தீமையானது? எல்லா மதங்களுக்கும் ஆதாரமாக அமைந்திருக்கும் முக்கியத்துவங்கள் அன்பு, ஒழுக்கம், தானம், தருமம், சத்தியம், பாரம்பரிய கலாச்சாரம், சகிப்புத் தன்மை முதலாய உண்மைகளை அவை அங்கீகரிக்கின்றன. ஆனால், பண்டைய கால ஒற்றுமைகளை மறந்துவிட்டு மனிதன் புறப்படுவதால் மனித மாண்புகள் அனைத்தும் மங்கி மறைந்து சீரழிந்து போகின்றன.



– ரெ. சிதம்பரி –

''இயேசு'' என்றால் பவித்திரமானவர் என்று பொருள் படும். இவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கைப் பாதை மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டது. அவர் தம் தாய் தந்தையரைப் பேணிவந்த விதம் சிறுவயது முதல் இறையரசைப் பறைசாற்றிய போதனைகள் எல்லாம் மனித குலத்திற்கு ஏற்றதாகவே அமைந்திருந்தன. நோயுற்றோர், பசியுற்றோர் எல்லோருக்குமே உதவி புரிந்தார். இறைதூதன் என்று தன்னை வெளிப்படுத்திய அவர் இறைமகன் என்ற நெருக்கத்தையும் வெளிப்படுத்தினார். தானே இறைவனின் மகன் எனவும் அறிவித்தார். வேத சித்தாந்தப்படி நானே ஒளி; என்னுள் ஒளி; நானே சத்தியம்; நானே ஜீவன் என்பதை விளக்குகின்றது. இயேசு மனிதரிடையே ஒற்றுமையை நிலைநாட்டி அவனை நல்வழிப்படுத்திப் பாவத்திலிருந்து மீட்கவே உயிர்த் தியாகம் செய்தார், உயிர்த்தெழுந்தார். ஆனால், இந்துக்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் எனப் பேதம் பார்த்துக் கடைசியில் மனிதத் தன்மை நிர்மூலமாக்கப்படுகிறது. மத உபதேசங்களையும், கோட்பாடுகயையும் கடைபிடிக்காமல் அழிவையே தேடிக்கொள்கிறோம் நாம்.

இறைவனை அடையவேண்டுமென்றால் நம்முள் இருக்கும் தெய்வத்தை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நிர்மல மான உள்ளத்தில் அன்பென்னும் விதையை ஊன்றி வளர்த்துக் கொண்டு பிறருடன் அதைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். இறைவனைத் தேடி அலையாமல் ஒவ்வொரு மனிதனும் தனக்குள் இருக்கும் இறைவனைக் கண்டு, அவர்மேல் முழு நம்பிக்கை வைத்து ஒருமுகமான முனைப்பினை மாற்றாமல் ஒரே வழியைப் பின்பற்றி ஒரே கடவுளை நம்பவேண்டும். இதுவே, பிரேம தத்துவம். அன்பே தெய்வம். அன்பே உலக மகா சக்தி ''வெள்ளை நிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ அல்ல உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்பதைக் கருத்தில் கொண்டு மனித மாண்புடன் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பது தெய்வீகம்!

மன்னிப்பவர் தெய்வீக நிலைக்கு உயர்கிறார்.
மன்னிப்பது சுவாசிப்பதைவிட அதிமுக்கியமானது.
மன்னிப்பதால் மட்டுமே வெறுப்பென்னும் சாத்தான் வெளியேறுகிறான்.
மன்னிப்பதால் மன்னிப்பு வழங்குபவரே அதிகம் நன்மை அடைகின்றார்.
மன்னிப்பவர்களால் மட்டுமே இறையரசு வளரும்.
மன்னிப்பவர்கள் இயேசுவின் மீட்புப் பணியில் பங்கேற்கின்றனர்.
மன்னிக்கும் கூட்டம் பெருகப் பெருக உலகில் தீமைகள் குறையும்.
மன்னிக்கும் மனிதர்கள்தான் மகிழ்ச்சியையும், நற்சுகத்தையும் அனுபவிக்க முடியும்.
மன்னித்துத் துவங்கும் திட்டங்கள் பன்மடங்கு பலன் தரும்.
மன்னிக்கும் மனிதர்மீது தூய ஆவியார் தமது வரங்களைப் பொழிகின்றார்.

அருட்சகோதரி மெடலின் F.M.M.

## பெயருக்குப் பின்னால்...



**பென்சில் :** முற்காலத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் 'பென்ஸில்லஸ்' என்ற தூரிகையைக் கொண்டே எழுதி வந்தனர். இந்த பென்ஸில்லஸை சுருக்கி பென்சில் எனப் பெயரிட்டனர்.

***சீனா* :** கி.மு. 246ல் சீனாவை சீன்-ஹி - கிராம்சி என்னும் மன்னன் ஆண்டார். அவரது பெயராலேயே அத்தேசம் சீனா என்று அழைக்கப்படுகிறது.





## ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் ஓர் அபூர்வ சந்திப்பு

கிறிஸ்தவ சரித்திரத்தில் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் இல்லாத வகையில் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் ரக்ஷ்ய மரபுவாத திருச்சபையின் தலைவரான பாட்ரியார்க் கிரில்லும் கியூபாவில் சந்தித்துப் பேசியுள்ளார். இந்தச் சந்திப்பின்போது உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் குறித்து பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவர்களிடையேயான சந்திப்பு, சித்தாந்த ரீதியில் பிளவுபட்டுள்ள கிறிஸ்தவ திருச்சபைகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்று கருத்துகள் வெளியாகியுள்ளன.

கிறிஸ்தவ திருச்சபை பிளவுபடும், பின்னர் பிரிந்தவர்கள் கூடுவார்கள் என இயேசு கிறிஸ்து தனது கடைசிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தது இப்போது நடைபெறத் தொடங்கியுள்ளது. இந்தச் சந்திப்பை அவ்வாறு கருதமுடியும் என்று அமெரிக்காவின் ஒரேகான் மாநிலம் போர்ட்லாந்திலுள்ள மல்ட்நோமா பல்கலைக்கழகத்தின் இறையியல் மற்றும் பரஸ்பர கலாச்சாரக் கற்கைகள் துறையின் பேராசிரியரும், திருச்சபைச் சரித்திரத்தில் தேர்ச்சிபெற்றவருமான கலாநிதி: மார்ட்டின் அல்போன்ஸ் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

## செங்கை ஆழியான்



**நா**ம் சிறுவர்களாக இருக்கும்போது நம் மனதில் இடம் பிடித்தவர்கள் பலர் இருப்பார்கள். நம் ஆசிரியர்கள், சில அரசியல் தலைவர்கள், சில நடிகர்கள், சில எழுத்தாளர்கள் ..... என்று சிலர் எம்மையறியாமலே எம் மனதில் ஏறி இருந்துவிடுவார்கள்.

அவ்வகையில் என் பள்ளி வாழ்க்கையில் எழுபதுகளின் நடுப்பகுதியில் என்னை அறியாமலே என்னை ஆக்கிரமித்தவர்களில் ஒருவர் 'செங்கை ஆழியான்'. அக்கால கட்டத்தில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அதிகம் காணப்பட்டன; உள்நாட்டு உற்பத்திகள்தான் ஊக்குவிக்கப்பட்டன. வீட்டுக்கு வீடு மரவள்ளித் தோட்டம் காணப்பட்ட காலமது. இரண்டு கொத்து அரிசிக்குமேல் கொண்டு சென்றால் பொலிசார் கைது செய்வார்கள். உடு புடவைகள் என்பன கூட்டுறவுச் சங்கக் கடைகளில் மாத்திரம் கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ளலாம்: அதுவும் நூறு வாடிக்கையாளர் இருப்பின் இருபது பேருக்கத்தான் 'துண்டு குலுக்கி' கிடைக்கும். யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு என்னும் இடத்தில் உற்பத்தி செய்யப்படும் காற்சட்டைத் துணிக்குத்தான் இலங்கை முழுவதும் 'டிமான்ட்'.

இந்த அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் பத்திரிகைத் துறையிலும் தாக்கத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தன. இந்தியாவில் இருந்து ஆனந்த விகடன், குமுதம் ..... உட்பட சகல சஞ்சிகைகளின் இறக்குமதியும் கட்டுப்படுத்தப்பட்டன; நமது உள்நாட்டுப் பத்திரிகைகளும் பக்கங்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டன. 'வீரகேசரி' வெறும் நான்கு பக்கங்களில் மட்டுமே வெளிவரத் தொடங்கியிருந்தது. அதுவும் கழிவுக் கடதாசியில் செய்த பத்திரிகைத் தாளில். அது ஒரு புறம் கிடக்க, எமக்குப் பாடசாலைகளில் பாவிக்கக் கிடைத்த அப்பியாசப் புத்தகங்களும் 'ஊத்தை' தாள்களாகத்தான் இருந்தன. 'சியால்' என்னும் ஊற்றுப் பேனாவால் கொப்பியில் ஒரு புள்ளி வைத்தால் அது ஊறி ஊறிக் கொப்பி முழுவதும் நீல மையாகிவிடும்.

இப்படி இந்திய சஞ்சிகைகள், நாவல்களின் வருகை தடைப்படத் தொடங்க வீரகேசரி நிறுவனம் நல்ல வேலையொன்றை ஆரம்பித்தது. வீரகேசரிப் பிரசுரம் என்றும், மித்திரன் பிரசுரம் என்றும் நாவல்களை வெளியிட ஆரம்பித்தது. அதில் கூட்டாளி, பதஞ்சலி ...... என்ற வரிசையில் கணிசமான வெளியீடுகளை வீரகேசரி வெளியிட்டது. அதேபோல் பட்லி, கறுப்புராஜா ..... போன்ற தொடர் நாவல்களை மித்திரன் வெளியிட்டது. இதனால் எமது மண்வாசனை ததும்பும் நாவல்களை வாசிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. காட்டாறு நாவல் மூலம் எனக்கு 'செங்கை ஆழியான்' அறிமுகம் ஆனார். நேரில் அல்ல: ஏகலைவன் போல்தான். அதன் பின்னர் அவருடைய எழுத்துகட்கு நான் இரசிகன். அவர், இலங்கை நிர்வாக சேவை அதிகாரி; பல்கலைக்கழகப் பதிவாளர்; புவியியல் துறை வல்லுநர்; நாவல் ஆசிரியர்; பாடநூல் ஆசிரியர் எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட மாமனிதர்.

நான் எண்பதுகளில் எழுத ஆரம்பித்துவிட்டேன். அப்போது எனக்கொரு புனைபெயர் தேவைப்

ஆழியோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சின்ன விஷயங்கள் சிறந்த வாழ்க்கை

**பயனுள்ள நேரம் ...**

ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்று ஓர் இளைஞர் நண்பர்களிடம் கேட்டார். சிலர் சினிமாவுக்குப் போகச்சொன்னார்கள். சிலர் நண்பர்களுடன் செலவிடச் சொன்னார்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு யோசனை வந்தது. பிறகு, நேர நிர்வாகவியல் நிபுணரை அழைத்து ஆலோசனை கேட்டார் இளைஞர். புத்தகம் படி, நல்ல காரியங்களைச் செய் என்றெல்லாம் சொல்லப்போகின்றார் என்பது இளைஞரின் எதிர்பார்ப்பு. நேர நிர்வாகவியல் நிபுணர் மிக நிதானமாகச் சொன்னார்...

"உன் ஓய்வு நேரத்தை மற்றவர்கள் தவறாகப் பயன்படுத்தாமல் பார்த்துக்கொள், அதுவே பயனுள்ள நேரங்களைத் தொடக்கி வைக்கும்" என்று.

**- ஜே.எச்.இரத்தினராஜா -**

**பிரச்சினைகளைச் சரியான அளவிலேயே சந்தியுங்கள்...**

சின்ன விஷயங்களுக்காகக்கூடப் பெரிதாய் அலட்டிக்கொள்ளும் பிரச்சினையிலிருந்து மீள, மனவியல் நிபுணரைச் சந்திக்கச்சென்றார் ஒரு மனிதர். சிறிதுநேரம் கண்களை மூடச் செய்து விட்டு பெரிய கண்ணாடித் தடுப்புக்கு மறுபுறம் இருந்த பழத்தைக் காண்பித்து "இது என்ன பழம்" என்றார். "சாத்துக்குடி" என்று பதில் வந்தது. கண்ணாடிச் சட்டத்தை அகற்றிவிட்டு, "இப்போது சொல்லுங்கள்" என்றதும் "எலுமிச்சை" என்றார்.

"இடையில் வைக்கப்பட்டிருக்கும் லென்ஸ்தான் உங்கள் மனம். அது எல்லாவற்றையும் பெரிதாக்கிக் காட்டுகிறது. பிரச்சினைகளை அவற்றின் சரியான அளவிலேயே சந்தியுங்கள்" என்று அறிவுரை சொன்னார் மனவியல் நிபுணர்.

பட்டது. ஏன்? என்னவென்று யோசியாது 'ஆழியோன்' என்று வைத்துவிட்டேன். அன்று தொடக்கம் இன்று வரை அப்பெயர்தான். ஆனால், ஏன் அப்பெயரை வைத்தேன் என்று எனக்குப் புரிந்திருக்கவில்லை. ஆனால், செங்கை ஆழியானின் மரணத்தின் பின்தான் அது எனக்குப் புரிகின்றது. அவரின் பெயரின் பாதிப்புத்தான் என்னுள் இருந்துள்ளது. அவர் செங்கை ஆழியான்: நான் ஆழியோன். என்னைப் பாதித்த மரணங்கள்: என்

## ஆழியானைத் தொலைத்தோம்...



நம் சித்தம் என்பது உறுதியானது;
அது என்றுமே பலமானது
எதை நாம் அதற்கு
ஊட்டமாகக் கொடுக்கின்றோமோ
அதையே நமக்கும்
பிரதிபலனாகத் தருகிறது.
வாழ்க்கை நமது சிந்தையில்
எதிரானதாகத் தெரியும்போது
சித்தம் எதிர்மறைகளைக்
கொண்டிருப்பது எதிரும் புதிருமாக
எண்ணிப்பார்க்கையில் தெளிவாகும்.
நமது சிந்தையில்
நேர் மறைகளை ஏற்றும்போது
சித்தம் முழுமையாய்த் தெளிவடையும்
வழ்வும் நேராய் மாற்றமடையும்;
உறுதியுடன் அதனை எதிர்கொள்ள
சித்தம் நமக்குத் துணைவரும்!

**- ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம் -**

அம்மா,
என் தந்தை,
என் மாமா, மாமி, நெல்சன் மண்டேலா,
அப்துல்கலாம், அருட்சகோ. ஜேம்ஸ் பீரிஸ்
அவ்வரிசையில் இப்போது 'செங்கை ஆழியான்'.

அவர் என்றும் தமிழ் இலக்கிய உலகில் வாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசுப் போட்டி
சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.04.2016

# திருவிவிலியம் கற்போம் – 154

## நீதித் தலைவர்கள் – 14:05 – 15:02

**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. சிம்சோனும், அவர் தந்தையும், தாயும் சென்று திம்னாத்தின் திராட்சைத் தோட்டங்களை வந்தடைந்தபோது ஒரு சிங்கக்குட்டி கர்ச்சித்துக்கொண்டு சிம்சோன் மீது பாய ஆண்டவரின் ஆவியின் ........................ சிங்கக்குட்டியை வெறுங்கையால் கிழித்தார்.

   அ) கொடையால் ஆ) சக்தியால் இ) ஆற்றலால்

2. சிம்சோன் அப்பெண்ணிடம் பேசியபோது அவளைப் பிடித்ததால் சில நாட்கள் கழித்து அவளைக் கூட்டிச் செல்ல மீண்டும் வந்தபோது, சிங்கத்தின் பிணத்தில் தேனடையும், ........................காணப்பட, அவர் தேனடையை எடுத்து அருந்தினார்.

   அ) வெட்டுக்கிளியும் ஆ) தேனும் இ) தினைமாவும்

3. சிம்சோனின் தந்தை ........................ வீட்டுக்குச் செல்ல, இளைஞர்களின் வழக்கத்தை அனுசரித்து சிம்சோன் விருந்தளித்தபோது அவர்கள் அவருக்குத் தோழராக முப்பதுபேரைக் கூட்டிவந்தனர்.

   அ) மணமகள் ஆ) பெண் இ) திம்னா

4. சிம்சோன் அவர்களிடம் "நான் சொல்லும் விடுகதைக்கு ஏழு நாட்களுக்குள் விடை கூறினால் முப்பது ........................, முப்பது மேலாடைகளையும் அளிப்பேன். கூறாவிடில் எனக்கு அவற்றை நீங்கள் தரவேண்டும்" என்றார்.

   அ) நார்ப்பட்டாடைகளையும் ஆ) பட்டாடைகளையும் இ) ஆடைகளையும்

5. சிம்சோன் "உண்பவனிடமிருந்து ........................ வெளிவந்தது; வலியவனிடமிருந்து இனியது வந்தது" எனக் கூறிய விடுகதைக்கு மூன்று நாளாகியும் விடைகாண முடியாததால், அவன் மனைவியிடம் கணவனை மயக்கி அறியச் சொன்னார்கள்.

   அ) உற்சாகம் ஆ) ஏப்பம் இ) உணவு

6. "விடையை அறிந்து கூறாவிட்டால் உன்னையும் உன் வீட்டையும் தீக்கிரையாக்குவோம்" என அவர்கள் மிரட்ட அவள் சிம்சோனிடம் சென்று ........................ விடையைக் கூறக் கேட்க ஏழு நாட்களின் பின் விடை கூறினார்.

   அ) தாழ்மையாக ஆ) அழுது இ) கோபமாக

7. விடையை அறிந்த அவர் மனைவி இளைஞரிடம் சொல்ல, ஏழாம் நாள் கதிரவன் மறையும் முன் அவர்கள் சிம்சோனிடம் "தேனினும் ........................ எது? சிங்கத்திலும் வலியது எது?" என்று கேட்டனர்.

   அ) இனியது ஆ) வலியது இ) நல்லது

8. சிம்சோன் அவர்களிடம் "என் இளம் பசுவைக் கொண்டு நீங்கள் ........................ என் விடுகதைக்கு விடை கண்டு பிடித்திருக்கவே மாட்டீர்கள்" என்ற போது ஆவி இறங்க, அஸ்கலோன் சென்று முப்பதுபேரைக் கொன்றார்.

   அ) அறிந்திராவிடில் ஆ) கேட்டிராவிடில் இ) உழுதிராவிடில்

9. சிம்சோன் தான் கொன்றவர்களின் உடைகளை உரிந்து விடை கூறியவர்களுக்குக் கொடுத்தார். அவருக்குச் சினம் பொங்க தந்தை வீடு செல்ல, அவர் மனைவி ........................ தோழனாக இருந்த ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாள்.

   அ) மாப்பிள்ளை ஆ) அவருக்கு இ) நல்ல

10. சில நாட்களின் பின் சிம்சோன் ........................ உடன் தன் மனைவியைச் சந்திக்கச் சென்றபோது, அவளது தந்தை மறுத்து, அவளது இளைய சகோதரியை மனைவியாக்கிக் கொள்ளுமாறு கூறினார்.

    அ) பழங்களுடன் ஆ) ஆட்டுக்குட்டியுடன் இ) பரிசுகளுடன்

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 154

**பரிசுப் போட்டி**




**(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)**

1. இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளினதும் எல்லைக்கோடு:
   (கிறீன் விச் - மெக்மோகன் - ஈக்குவடோர்)

2. வில்லுப்பாட்டின் தாயகம் என அழைக்கப்படும் இந்திய மாவட்டங்கள் :
   (குமரி, நெல்லை - நெல்லை, மதுரை - குமரி, திருச்சி) [redacted]

3. போர்த்துக்கேயர் காலத்தில் 120 ஆக இருந்த கத்தோலிக்கக் குருக்கள், ஒல்லாந்தர் காலத்தில் ஒருவர்கூட இல்லாதநிலை நீடித்த காலம் :
   (40 ஆண்டுகள் - 20 ஆண்டுகள் - 30 ஆண்டுகள்)

4. பொட்டாசியமும், மக்னீசியமும் உள்ளடங்கியிருப்பதால் அமிலத் தொந்தரவு அதிகம் ஏற்படாது காக்கும் உணவுப்பொருள் :
   (கிஸ்மிஸ் - திராட்சை - தோடை)

5. ‘தேள் நெருப்பில் விழுந்தால் எடுத்துவிட்டவனுக்கே ..............................’
   (குத்தும் - கொட்டும் - கடிக்கும்)

6. வினையடியாகப் பிறந்து வினை நிகழ்வினை அல்லது வினை நிகழாமையை உணர்த்துவது :
   (தொழிற் பெயர் - காலப் பெயர் - குணப் பெயர்)

பெயர் : ..............................................................................

முகவரி: ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 154**
**தொண்டன்**
**அ. பெ. எண் – 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போட்டி முடிவுகள்...

## திருவிவிலியம் கற்போம் - 152 விடைகள்

எப்ராயிம், ஷிபோலத்து, 42,000, இப்தா, பெத்லகேமை, நிலப்பகுதியில், பிராத்தோன், நாற்பது, தாண், தீட்டான

## அறிவை வளர்ப்போம் - 152 விடைகள்

**1.** பறக்கும் **2.** நேரு விருது **3.** 1658.06.23

**4.** வௌவால் **5.** கழுத்தில்லாதவர் **6.** முன்னேறு

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

**போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்**

- அக்ஷிதா டேனிஷா டெரன்ஸ்,
  24/11, 1ம் குறுக்கு,
  செல்வநாயகம் வீதி,
  மட்டக்களப்பு.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்கள்**

- செல்வி. R. டேனிஷாலி ஆன்,
  இல. 16, கோணர் வீதி,
  மட்டக்ளப்பு.
- கியுரிக்கா அவுட்ஸ்கோன்,
  இல.47/01,
  வனத்து அந்தோனியார் கோயில் வீதி,
  இருதயபுரம் மேற்கு,
  மட்டக்களப்பு.
- A. அனோமிக்கா,
  6/50, சொறிக்கல்முனை,
  சம்மாந்துறை.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 104 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  சௌந்தரராஜன் லஷினி,
  29, அம்புறூஸ் வீதி,
  கருவேப்பங்கேணி,
  மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  ச. சுகேஷன்,
  65/1, திருச்செந்தூர் கோயில் வீதி,
  கல்லடி,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  மு. நிதுர்சன்,
  புனித சூசையப்பர் சிறிய குருமடம்,
  விமான நிலைய வீதி,
  திருப்பெருந்துறை,
  மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


JESUIT ACADEMY
Congratulations!
மட்டக்களப்பு - இயேசுசபை கல்வி நிலையத்தின் 10வது வருடாந்த
சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 13.02.2016 அன்று
சால்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. சான்றிதழ் பெற்ற மாணவர்களுள்
12 பேர் தமிழ்நாடு - சென்னை லொயோலா கல்லூரியின் ஆங்கில
டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவர்கள் என்பது
குறிப்பிடத்தக்கது. சென்னை லொயோலா கல்லூரியின் அதிபர்
அருட்தந்தை. J. அந்தோனிசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு
வைபவத்தைச் சிறப்பித்தார்.